இ... பதிவு செய்யப்பட்டது.


# தொழிலாளர் பாதை

விலை : ரூபா. 2/-

● மாதமிரு இதழ் — 406 ● 1991 மே 24 வெள்ளிக்கிழமை


(2-ம் பக்கம் பார்க்க)

**ராஜீவ் காந்தி படுகொலை :**
**இந்திய முதலாளித்துவத்தின் நெருக்கடியின் வெளிப்பாடு**

4 ஆம் பக்கமும் 5ஆம் பக்கமும் பார்க்கவும்

**பு. க. க. மேதின கூட்டம்**

University of Sri Lanka RECEIVED 1991 -7- 2 4 Periodicals Division Library

### யூ. என். பி. அரசாங்கம் உக்கிரமாக்கும்

# வட-கிழக்கு, கிராமப்புற இரத்த களரியை நிறுத்து!

பிரேமதாசா அரசாங்கம், முன்னோரு போதுமில்லாத மட்டத்தில் வடக்கு—கிழக்கு பகுதிகளில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழுமிடங்களில் குண்டுமாரி பொழிந்து, இரத்தக்களரியை உக்கிரமாக்கியுள்ளதோடு, தெற்கில் சிராமப்புறங்களில் இளைஞர் கொலை. பயங்கரச் செயல்கள் பற்றிய தகவல்கள் கடந்த சில வாரங்களாக இடைவிடாது வெளிவந்த வண்ணம் உள்ளது. இவையாவும் உள்ளூராட்சிசபை தேர்தல் நடத்துதல் உட்பட சனநாயகம் பற்றிய பொய்ப் பேரிகைக்கு மத்தியில் பிரேமதாச அரசாங்கம் கொண்டுநடத்திவரும்பெரும் புளுகாகும். தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களை இராணுவ சப்பாத்துகளால் மிதித்து நசுக்கி, ஏகாதிபத்தியபாணி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த, தயாராகும் இரத்தக்களரியின் கொடிய தன்மையை நீண்டும் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த இரண்டாண்டுகளாக கிராமப்புற படுகொலைத் தயாரிப்பில் ஈடுபட்டு அபகீர்த்திவடைந்த இராணுவ சபையின் அதிகாரியான மேஜர் ஜெனரல் சிசில் வைத்திய ரத்ன கடந்தமார்ச் பாத இறுதியில் மட்டக்களப்பிற்கு மாற்றலாகியதுடன் மட்டக்களப்பு நகரம் ''பிசாசு நகரமாக'' மாறியுள்ளது. அரசப்படைகளினால் அமைக்கப்பட்ட கொலை கும்பல் வான்களில் வந்திறங்கி வீடுகளில் பாய்ந்தும் அல்லது நடுவழியில் இளைஞரை பிடித்துச் சென்றோ சித்திரவதை செய்து சுட்டு அல்லது வெட்டி உடல்களை அங்குமிங்கும் வீசிவிட்டு சென்ற சம்பவம் பல கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. இது தெற்கில் கிராமப்புறங்களில் இலட்சத்துக்கதிகமான இளைஞரை கொலை செய்து நடத்திய யயங்கர வாத இயக்கத்துடன் பெரிதும் ஒத்துப்போகிறது.

ஏப்ரல் 30ம் திகதியன்று மட்டும் இங்ஙனம் கொலையுண்ட 8 சடலங்கள் மட்டக்களப்பு நகரில் காணப்பட்டன. இருதயபுரம், கல்லடி பகுதியிலிருந்து ஐந்து சடலங்கள் கிடைத்துள்ளன. வெட்டி குத்தி கொலைசெய்யப்பட்டி

## 'தொழிலாளர் பாதை' ஆசிரியர் குழு அறிக்கை

ருந்த அல்விடங்களில் ஒன்று மட்டக்களப்பு விடுதலைப் புலிகள் தலைவரான கரிகாலனது சகோதரனும் தபால் தந்தி தொடர்பு திணைக்கள ஊழியனதுமாகும். இக்கொலைகார நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் ஏக்கமடைந்துள்ள நிலையில் அரசாங்க படையின் ஒரங்கமாக செயற்பட்டுவரும் டெலோ இயக்கத்தின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான கருணாசரனும் கொலையை கண்டித்து, கூட்டுப்படை அலுவலகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகமுதலாளித்துவ பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன,

இதே சமயம் விடுதலைப் புலிகளிடமிருந்து வடபகுதியை கைப்பற்றி கொள்ளும் பொருட்டு கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வரும் விமானக் குண்டு வீச்சினால் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள்மட்டுமன்றிநூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள்சொலையுண்டுள்ளதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிமுகாம்களுக்கும் காட்டுப் புறங்களுக்கும் விரட்டப்பட்டுள்ளனர். இராணுவ தடுப்பு முகாம்களில் கூட சாதாரண மக்கள் பச்சைப் படியாகசுட்டுகொல்லப்பட்ட பயங்கரம் இடம்பெற்றுள்ளன. அத்தகைய ஒன்றில் அகப்பட்டு யாழ். பல்கலை கழகத்திலிருந்து, கொழும்பு திறந்த பல்கலைகழக வளாகத்துக்குவந்து கொண்டிருந்த என். மதீதரனும் பலியாகியுள்ளார். அவர் வவுனியா விசாரணை தடுப்புமுகாமில் வைத்து அரசபடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண அகதிகள் எண்ணிக்கை தமிழினத்தின் அரைப் பங்கான 62 இலட்சமாகியுள்ளது. கடந்த சில தினங்களாக மன்னார்ப்பகுதியில் குண்டுபொழிந்து அப்பாவி மக்களை விரட்டியதன் மூலம் மடு அகதிமுகாமில் அகதிகளது எண்ணிக்கை 36,000 ஆக அதிகரித்துள்ளது பல ஆயிரக்கணக்கானமக்கள் தொடர்ந்து வவுனியா அகதி முகாம்களுக்கு வந்த வண்ணமுள்ளனர்.

இந்தகொலைசுரயுத்தம், 1990 யூன் மாதத்திலிருந்து வடக்கு கிழக்கு தமிழருக்கு எரிபொருள் மற்றும் அத்தியாவசியச் பொருட்களை தடை செய்ததோடு, உணவு, மருந்து பொருள் கட்டுப்படுத்தி, பட்டினிக்கும் நோய்களுக்கும் அவர்களை ஆட்படுத்தி விட்டுள்ள நிலைமையிலேயே மேலும் உக்கிரமாக்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கு மருந்து உணவுப் பொருட்கள் செல்வதை முற்றாக தடுக்கும் பொருட்டு பிரேமதாசா அரசாங்கமானது தற்சமயம் விமானப் படையையும் அணி திரட்டியுள்ளது.

30,000 அகதிகளை கொண்டுள்ள மடுப்பகுதியில் சேவை செய்யும் பிரான்சிய சுகாதார அமைப்பின் டாக்டர்கள், தாதிகளை கொண்டு சென்ற வாகனத்திற்கு மே 3ம் திகதி விமானப்படை குண்டுமாரி பொழிந்தநால் பலர் கடும் காயமடைந்தனர்.

அதேசமயம், ஐக்கிய நாடுகளினது 'மனித உரிமை பேணும் அமைப்பு'' மடு அகதிகள் முகாமிற்கு உணவு பொருட்களை கொண்டு சென்ற லொறியில்விடுதலைப்புலி இயக்க போராளிகள் சென்று, அரசப்படையின் கூலிப்படையாக இயங்கும் புளொட் அங்கத்தவரை தாக்கினர் என்ற இராணுவ குற்றச்சாட்டின் பேரில் உணவுப் பொருட்களை எடுத்துச்செல்வதை நிறுத்தி வைத்துள்ளது, ''மனித உரிமை பேணும் அமைப்பு'' இக்குற்றச்சாட்டு ஒரு கட்டுக்கதை என கூறியுள்ளது.

பிரேமதாச அரசாங்கம் இங்ஙனம் வடக்கு—கிழக்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் வாழுமிடங்களில் கொடிய

(2-ம் பக்கம் பார்க்க)



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மேதின ஊர்வலததின் ஒரு கட்டம்

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் காந்தி படுகொலை: இந்திய முதலாளித்துவ நெருக்கடியின் வெளிப்பாடு

இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி மே 21ம் திகதி பேரம்புதூரில் கொலை செய்யப்பட்டமையானது, இந்திய முதலாளி வர்க்கம் முகம் கொடுத்துள்ள உக்கிர நெருக்கடியை வெளிக் காட்டியுள்ளது.

அன்று இரவு 10 மணியளவில் பேரம்புதூரில் நடைபெறவிருந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு காந்தி வருகை தந்து கொண்டிருந்த வேளையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் இக் கொலை இடம் பெற்றுள்ளது.

இச்சமயத்தில் இந்திய பொதுத் தேர்தலின் முதற் கட்ட வாக்களிப்புக்கள் முடிவடைந்திருந்ததோடு அடுத்த கட்ட வாக்களிப்புக்கள் மே 23, 26ம் திகதிகளில் இடம் பெறவிருந்தன. காந்தி கொலையைத் தொடர்ந்து இவை ஜுன் 12ம் 15ம் திகதிகளுக்கு பின்போடப்பட்டுள்ளன.

தேர்தல் இயக்கத்தில் ராஜீவ் காந்தியின் உருவத்தைத் தூக்கிப் பிடிக்க ஏகர்திபத்திய வாதிகளும் இந்திய தேசிய முதலாளித்துவப் பத்திரிகைகளும் பெரிதும் முயன்றன. 'பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்புக்கள்' காந்தி வெற்றியீட்டுவார் எனக் கூறிக் கொண்டன. இதற்கிடையே ராஜீவ் காந்தியின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஏகாதிபத்திய வங்கியர்ளர்களின் வேலைத்திட்டங்களை அமுல் செய்வதாக வாக்குறுதியளித்திருந்தன. இவை ஏகாதிபத்தியவாதிகளதும், இந்திய முதலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினரதும் இலக்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்தின. இந்நிலையில் காந்தி கொலையையிட்டு ஜோர்ஜ் புஷ், ஜோன் மேஜர், ஹெல்மட் கோல் முதலான முன்னணி ஏகாதிபத்தியத் தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் சொண்டமை ஒன்றும் புதுமையல்ல.

சுதந்திரம் என்ற பேரில் பிரித்தானிய ஏகாதிபத்திய, காலனித்துவ ஆட்சியாளர்கள் இந்தியமுதலாளி வர்க்கத்திடம் கைமாற்றிய அரசியல் அதிகாரமானது 4 தசாப்தங்களின் பின்னர் உக்கிரமான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதை காந்தி கொலை நன்கு சுட்டிக்காட்டுகின்றது.

### "சுதந்திரம்"

1947—48ல் இப்பிராந்தியத்தில் சுதந்திரம் எனப்பட்டதை வழங்கிய வேளையில் ஏகாதிபத்திபவாதிசுள் இந்தியாவை, இந்தியாபாகிஸ்தான் என்ற இரண்டு அரசுகளாகத் துண்டித்ததோடு இலங்கை, பர்மா, நேபாளம் என்ற வேறும் பல குட்டி வம்பு அரசுகளையும் திணித்தனர். இன, மத பிரிவினை கோஷங்களால் இலட்சோப லட்சம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் இரத்தக் களரிகளுக்குப் பலியாகினர். இந்தியாவை இங்ஙனம் கூறுபோடும் ஏகாதிபத்திய சதிகளில் காங்கிரஸ், முஸ்லீம் லீக் தலைவர்கள் ஒன்றிணைந்தனர். அத்தோடு ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கம் ஆட்சியைக் கொண்டு நடாத்துவதற்கான அரசியல் மூலோபாயமாகவும் இந்த இன, மத கோஷங்கள் விளங்கின. இந்தத் தீர்வுகள் உண்மையில் ஏகாதிபத்திய அமைப்பினைத் தொடர்ந்தும் பேணும் பொருட்டு ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் 'தேசிய முதலாளிகளதும்' ஆதரவுடன் திணித்த யுத்தத்தின் பின்னைய தீர்வுகள் ஆகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய வாதிகள் நிச ஜனநாயக உறவுகளை ஸ்தாபிதம் செய்யும் எந்தவொரு தேசிய அரசினையும் நிறுவ இடமளிக்கவில்லை. இந்தியாவை பிரிவினை செய்தமை இதற்கான இரத்தம் தோய்ந்த ஓர் உதாரணமாகும். தேசிய முதலாளிகள் எனப்பட்டோர் ஏகாதிபத்தியவாதிகனின் இந்த நலன்களின் கனிஷ்ட பங்காளிகளாக விளங்கினர், இந்தியாவின் ஒரே தேசிய இனமானது மத அடிப்படையில் இரண்டாகக் கூறு போடப்பட்டது. முதலில் பஞ்சாப், வங்காளமும், பின்னர் காஷ்மீரும் இந்தத் தலைவிதிக்குப் பலியாகின.

இந்த ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகள் இந்தியாவின் சோடானுகோடி விவசாயிகளின் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண்பதில் வெற்றி பெறவில்லை. சாதி முறை உள்ளடங்கலான நிலமானித்துவ மிச்சசொச்சங்கள், முதலாளிகள் இந்திய விவசாயிகளையும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களையும் அஞ்சாமல் சுரண்டுவதற்கான மார்க்கங் களாக்கப்பட்டன. அத்தோடு தொழிலாளர், ஏழைகளின், வறுமையும் — படிப்பறிவின்மையும் சுரண்டலையும்சமூக பிரச்சினைகளையும் உக்கிரமாக்கும் சாதனமாகக் கொள்ளப்பட்டது.

### நேரு 'சோசலிசம்'

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட 'சுயபூர்த்தி வேலைத்திட்டம்,'' ஏகாதிபத்தியவாதிகளின் ஆளுமையின் கீழ், இந்திய முதலாளிகளின் சுரண்டல் வழிகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வேலைத்திட்டமாக விளங்கியது. இந்திய முதலாளி வர்க்கத்துக்கு தொழிலாளர், விவசாயிகளை அடிமைப்படுத்தி வைக்கும் பொருட்டு சோவியத் ஸ்டாலினிஸ்டுகள் முதல் பப்லோவாத திரிபுவாதிகள் வரையிலான சகல [illegible] தலைமைகளும் 'நேரு சோஷலிசம்' பற்றி புகழ்ந்து கொண்டனர்.

தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்களைத் தொடர்ந்து உலகப் பொருளாதாரத் துறையில் உருவான ஒருங்கிணைவுகள் இந்த சுயபூர்த்தி வேனலத்திட்டங்களை அடியோடு வங்குரோத்தடையச் செய்தது, அத்தோடு இந்தியாவிள் பிரமாண்டமான வளங்களும், சந்தைகளும் சுரண்டப்படுவதற்கு ஏகாதிபத்தியவாதிகளுக்கு கதவு திறந்தது, காங்கிரஸ் பாரதீய ஜனதா கட்சி தேர்தல் விஞ்ஞாபனங்களில் இந்த பொருளாதாரக் கட்டுப்பாடுகளை ''தளர்த்தும் வேலைத்திட்டங்கள்'' முக்கிய இடம் பிடித்துக் கொண்டுள்ளன.

### இரத்தக்களரி

இந்திய ஆளும் வர்க்கத்தின் ஏகாதிபத்தியச்சார்பும்.வலது சாரிபாய்ச்சலும்தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் தொழில். சம்பளம், வாழ்க்கைத்தரங்களை நாசமாக்கும் நடவடிக்கைகளை உக்கிரமாக்கி உள்ளது. இதன் பொருட்டு இந்தியாவினுள் இன. மத அடிப்படையில் பெரும் இரத்தக் களரிகளைச் சிருஷ்டிப்பது அவர்களுக்கு அவசியமாகியுள்ளன. பாசிச இலட்சணங்கள் கொண்ட இனவாத இயக்கத்தினை அணிதிரட்ட பாரதீய ஜனதாக் கட்சி செய்யும் முயற்சிகள், ஏகாதிபத்தியவாதிகளதும். இந்திய முதலாளி வர்க்கத்தினதும் இரத்தம் தோய்ந்த நலன்களின் வெளிப்பாடாகும், இந்த இன, மத மோதுதலைச் சிருஷ்டிப்பதில் காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதா கட்சியுடன் போட்டியிட்டு வருகின்றது,

காந்தி கொலை சம்பந்தமான இந்திய முதலாளி வர்க்கத்தின் 'கவலையும்', ஏகாதிபத்தியவாதிகளின் அனுதாபமும், இந்த ஏகாதிபத்திய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இலாயக்கான ஒரு அரசியல் தலைமை கிடைக்குமா என்பதால் உண்டானவை.

காந்தி கொலையையும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு நன்கு பழகிப் போன இன, மத இரத்தக்களரியாகத் திருப்பும் முஸ்தீபுகளில்ஆளும் வர்க்கத்தின் சில பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். இக்கொலையை தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலையாகக் காட்ட அவர்கள் முயற்சிக்கிறார்கள், தமிழ் தேசிய இனத்தினைக் கொன்று குவிக்கும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பிரேமதாச அரசாங்கத்திடமிருந்து இம் முஸ்தீபுகளுக்கு பூரண ஆதரவு கிடைத்துள்ளது, இதற்கிடையே விடுதலைப் புலிகள் தலைமை கடந்த மார்ச் 5ம் திகதி ராஜீவ் காந்தியை புது டில்லியில் [illegible] சந்தித்து, 'நல்லுறவுகளை' ஏற்படுத்திக் கொண்டதாக 'ஹிந்து' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இவை தேசியவாத விடுதலைப் புலிகள் தலைமை, இந்திய முதலாளி வர்க்கத்தின் எந்தவொரு பிற்போக்கு அரசாங்கத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள மட்டுமன்றி ஏகாதிபத்தியவாதிகளின் ஒத்துழைப்பைபெற்றுக்கொள்ளவும் அவர்கள் திரும்பியுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது,

### தனியார் பயங்கரவாதம்

ராஜீவ் காந்தி உட்பட இந்திய முதலாளி வர்க்கத் தலைவர்கள் இந்தியாவினுள் மட்டுமன்றி இப்பிராந்தியம் பூராவும் தொழிலாளர் ஏழை விவசாயிகள், சிறுபான்மை தேசிய குழுக்கள், மதக் குழுக்களை நசுக்கும் வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஒரு புறத்தில் அரசியலில் இருந்து வழி தவறிச்சென்ற குழுக்கள். அரசியல் பழிவாங்கும் தனியார் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர், அத்தோடு ஏகாதிபத்தியவாதிகளுடனான உறவுகளை இறுக்கமாக்கிக் கொண்டு, ஆளுக்காள் குரல்வளையை நசுக்கும் முதலாளித்துவக் குழுக்களாகவும் தொழிற்படுகின்றன, இவை இந்திய முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியையும் நாற்றமெடுப்பையும் சுட்டிக் காட்டுகின்றன. இந்த முதலாளித்துவ அரசியலுக்கு இந்திய ஸ்டாலினிச சீ. பீ. ஐ, சீ. பீ. எம், கட்சிகளும் இலங்கை சமசமாஜ, கம்யூனிச நவசமசமாஜ கட்சிகளின் துரோகிகளும் முண்டு கொடுக்கின்றன,

பிராந்தியத்தின் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் வரலாற்றுப் பிரச்சினைகளின் முச்சந்திக்கு வந்துள்ளனர். ஏகாதிபத்தியவாதிகளும் தேசிய முதலாளித்துவ வர்க்கமும் சிருஷ்டித்த இன, மத, தேசிய பிரிவினர்களை சுக்குநூறாக்கி நிச ஐக்கியத்தைச் சிருஷ்டிக்கவும், சரித்திரத்தின் ஆதாளபாதாளத்தில இருந்து மீட்சி பெறவும் ஒரே ஒரு மார்க்கமே உள்ளது. தொழிலாள வர்க்கம் விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்களுடனான புரட்சிகரப் பிணைப்பை உறுதி செய்து கொண்டு, முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, உலகப் புரட்சியின் ஒரு பாகமாக இந்திய துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டி எழுப்புவதே. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், நா, அ. அ. குழுவுடன் அரசியல் உறவுகொண்ட இந்திய சோசலிச தொழிலாளர் கழகமும் இவ்வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே தொழிற்படுகின்றன,

## யூ என். பி. அரசாங்கம்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்குமுறையை கையாள்வதுடன் தென்பகுதிகளில் கிராமப்புற வறியமக்களுக்கெதிரான பயங்கர செயல்களை கடந்தசில தினங்களாக கட்டவிழ்த்துள்ளது. பிடியாணையின்றி கைதுசெய்யும் அவசரகால சட்டவிதியை மே 4ம் திகதி தற்காலிகமாக நிறுத்தியதாக பிரேமதாச அரசாங்கம் கூறிய போதும் மே 7-ம் திகதி அரசாங்கம் கட்டவிழ்த்த கொலைகார நாய்க்கும்பல்களால் கொலை செய்யப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட 4 உடல்கள் குருநாகல் பொத்துஹர பிரதான வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதம் கினிதும சி. ல, சு. கட்சி இளைஞர் இயக்க செயலாளர் பொலிஸ் படையினாரால் பிடித்துச் செல்லப்பட்டார். தூர காட்டுப் பகுதியில் அடையாளம் காணமுடியாத விதத்தில் எரியுண்டிருந்த சடலங்களில் ஒன்று இவருடையது என சந்தேகிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் மீறல் தொடர்பாக பூசா சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்டிருந்த ஏழு இளைஞர்கள் சார்பில் தான் ஆஜராகி வாதாடியதன் பின் அவர்கள் காணாமல் போய்விட்டார்கள் என சட்டத்தரணி தர்மதாச கோமஸ் மே 10ம் திகதி உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டுள்ளார். அவர்கள் அனுராதபுரத்தை சேர்ந்த எஸ், திலகரத்ன, திககொட எஸ் டபிள்யூ புஷ்பகுமார். அக்குரஸ்சே டி. பத்மசிரி, தெனியாயராஜேந்திரன், கபரணை கே, பீ. காமினி, தியதலுவ எஸ். எல். தயாசேன, மாத்தறை எஸ். கே. ஜயந்த ஆகியோராவார்கள். 1989ல் இருந்து அவர்கள் பூசா முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு — கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் கிராமப்புறவறியவர்களையும் நசுக்கிவிடும் கொலைகார இயக்கத்தை கொண்டு நடத்தும் பிரேமதாச அரசாங்கமும் முதலாளித்துவ ஆட்சியாளரும் மறுபுறத்தில் ஏகாதிபத்திய வங்கியாளரது ஆணைப் பிரகாரம் தொழில், சேவை நிலைமை மற்றும் சனநாயக உரிமைகளை தகர்த்து,தொழிலாள வர்க்கத்தை இரத்தக் களரியில் மூழ்கடிக்க தயாராகின்றதென நாம் எச்சரிக்கிறோம்.

கொலைக் கும்பல்களை சுதந்திரமாக உலவ விடுவதுடன் ''சட்டபூர்வமான'' பயங்கரச் செயலுக்காக பிடியாணையின்றிகைதுசெய்தல், சிறைப்படுத்தல், அடைத்து வைத்தல், விசாரணைசெய்தல் உடல்களை அழித்தல் என்பவற்றுக்கான அதிகாரம் அரச படைக்கும் பொலிஸாருக்கும் வழங்குவதான அவசரகால சட்டம் மே 11ம் திகதி நடுச்சாமத்திலிருந்து மீண்டும் அமுலாக்கப்படுவதாக சனாதிப

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அட்டன் — டிக்கோயா தொழிலாளர் மகாநாடு!

# உலகவங்கி - யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிராக பொது வேலைநிறுத்தத்தினை ஒழுங்கு செய்!


உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிராக சோசலிச வேலைதிட்டத்தின், அடிப்படையில் போராட்டத்தில் குதிக்க தயாராகுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அட்டன் — டிக்கோயா நகர சபைமண்டபத்தில்நடாத்திய தொழிலாளர் மகாநாட்டில் பேசிய பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ. ஏ. சுனில் குறிப்பிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைகள் யூ. என். பி. அரசாங்கத்துள் நுழைந்து கொண்டும், சமசமாஜ - கம்யூனிச — நவசமசமாஜ கட்சிகளின் தலைவர்கள் யூ. என். பி—சி.ல. சு. க. வுடன் இணைந்தும் நடாத்திவரும் துரோக வேலைத்திட்டத்தினை சுக்குநூறாக்கும் விதத்தில் இப்போராட்டம் இடம் பெற வேண்டும் என அவர் தோட்டத் தொழிலாளர்களை வேண்டினார்.

தொண்டமான் — செல்லச்சாமி யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறு! சமசமாஜ—கம்யூனிச— நவசமசமாஜ தலைவர்களை சி. ல. சு. க.வுடனான கூட்டினை உடைக்கும்படி நெருக்கு! உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிராக பொது வேலைநிறுத்தத்தினை ஒழுங்கு செய்! சோசலிச வேலைத்திட்டத்துக்காகப் போராடு! என்ற போராட்ட சுலோகங்களின் அடிப்படையில் இந்த மகாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

ஏப்ரல் 21ம் திகதி அட்டன் — டிக்கோயா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இத் தொழிலாளர் மகாநாட்டில் தோழர். சுனிலின் அரசியல் அறிக்கையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் தொழிலாளர்கள் பல கேள்விகளை எழுப்பி, கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ளபிரச்சினைகளை விபரிக்கையில் தோழர். சுனில் குறிப்பிட்டதாவது: ''உலக வங்கி கட்டளையின் பேரில் இலட்சக் கணக்கான தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதும், குடியுரிமை அற்ற



பு. க, க; அட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் நடாத்திய பிராந்திய மகாநாட்டுக்கு வருகை தந்த தொழிலாளர், அரசியல் அறிக்கையை செவிமடுக்கிறார்கள்.

இலட்சக் கணக்கான தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவதும், சம்பள வெட்டும், இளைஞர்களை வேலையின்மைக்குள் மூழ்கடிப்பதும், வீடில்லாப் பிரச்சினையை உக்கிரமாக்குவதும், ஜனவசம், அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களை மூடிவிட்டு தோட்டங்களை முதலாளிகளிடம் ஒப்படைப்பதும் யூ. என். பி. அரசாங்கத்தின் திட்டங்களாகும்.

''6 நாள் வேலை வாரம் வெட்டப்பட்டுள்ளது. எனினும் பகல் 1 மணிக்கு வேலை நிறுத்த வேண்டிய தொழிலாளர்கள் மாலை 4/30 மணி வரையும் வேலையை தொடருமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இதன் அடிப்படையில் தொழிலாளர்கள் கிழமையில் 17/20 மணித்தியாலங்ஙள் மேலதிகமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. 18வயது எட்டிய இளைஞர்கள் தோட்டங்களில் வேலை செய்ய இருந்து வந்த உரிமை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

### 'இரட்சகர்கள்'

''தோட்டத் தொழிலாளர்களின் இரட்சககர்ளாகக் கூறிக்கொள்ளும் இ.தொ.கா தலைவர்களான தொண்டமான் செல்லச்சாமி இத்தாக்குதல்களின் பங்காளிகளாகியுள்ளனர். பெப்ரவரி27ம்திகதி தமது உரிமைகளின் பேரில் வேலைநிறுத்தத்தில் குதித்த இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள், யூ. என். பி - இ. தொ. கா. தலைவர்களின் எண்ணற்ற தடையுத்தரவுகளை எல்லாம் முறியடித்தனர்.'' என தோழர். சுனில் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இன்று இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் பிரேமதாச அரசாங்கம் வட—கீழ் மாகாண தமிழ்ஈழ பிராந்தியங்களில் வதியும் தமிழ் தொழிலாள - ஒடுக்கப்படும் மககளுக்கும், சிங்கள கிராமப்புற ஏழைகளுககும் எதிராக நடாத்திவரும் தாக்குதல்களின் ஒரு பாகமாகும் எனவும் தோழர். சுனில் சுட்டிக் காட்டினார். கிராமப்புற இளைஞர்களை இலட்சக் கணக்கில் படுகொலை செய்வதும், தொழிலாளர் உரிமைகளை உலக வங்கி கட்டளையின் பேரில் நாசமாக்குவதும், தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தமும் இடம் பெறும் முறைமையை தோழர். சுனில் விபரித்தார்.

பு. க. க, மத்தியகுழு உறுப்பினர் தோழர் எம். அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பேசிய தோழர். சுனில் உலக நெருக்கடியின் உக்கிரம் பற்றிக் குறிப்பிட்டதாவது:

''உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பாகமாக இலங்கை முதலாளி வர்க்கமும் நெருக்கடிக்குள் தலை மூழ்கிப் போயுள்ளது. இந் நெருக்கடியை தொழிலாள - ஒடுக்கப்படும்மக்கள்மீது திணிக்கவும், அதற்கான ஒரு இராணுவபாசிசஆட்சியைஉருவாக்கவும் ஆளும் வர்க்கம் முயற்சிக்கின்றது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அமைப்பினுள் நிலவிய சமபல நிலை தகர்ந்து போய் விட்டது. அதன் உக்கிரம் காரணமாக உலகினைக் கூறு போடும்—காலனிகளை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் அவசியம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

''இலங்கையில் நாம் முகம் கொடுக்கும் நிலைமைகள் ஏகாதிபத்தியவாதிகளின் பிற்போக்கு நலன்களுடன் தொடர்புபட்டவை. எனினும் ஏகாதிபத்திய வாதிகளும்; தேசிய முதலாளிகளும் சவாலில்லாமல் இதனைச் செய்ய முடிவது எப்படி? இன்றைய தீர்க்கமான பிரச்சினை இதுவே. தேசியவாத, சந்தர்ப்பவாதத் தலைவர்கள்அனைத்துலக ரீதியில் வலது பக்கம் சென்றுள்ளார்கள். இதன் ஓர் பாகமாக இலங்கையில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ; இ. தொ. கா. கட்சிகளின தலைவர்கள் முதலாளி வர்க்கத்தின் பொலிஸ் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.'' என தோழர் சுனில் சுட்டிக்காட்டினார்.

தேசிய இன, மதப் பிளவுகளின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் வேலைத் திட்டத்தினைத் தயார் செய்து கொள்ள முடியாது எனக் குறிப்பிட்ட தோழர் சுனில், அது அனைத்துலக வாதத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றார். தொழில், சம்பளம் வாழ்க்கைத் தரங்களுக்கான தோட்டத் தொழிலாளரின் போராட்டத்தின் பெரும் அவசியத்தினை வலியுறுத்திய தோழர் சுனில் அப்போராட்டம் தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பகுதியினருடன் ஒன்றிணைந்து இடம்பெற வேண்டும்எனவும் வட-கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினதும் கிராமப்புற ஏழைகளதும் ஜனநாயக உரிமைகளைக் காக்க நடாத்தும் சோசலிச வேலைத்திட்டத்துக்கான போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த அடிப்படையில் உலக வங்கித் தாக்குதலுக்கு எதிராக பொதுவேலை நிறுத்தத்துக்கு தயார் செய்யப்போராடும்படி அவர் தோட்டத் தொழிலாளர்களை வேண்டிக் கொண்டார்.

இம்மகாநாட்டிவ் ஆரம்ப உரை நிகழ்த்திய தோழர், எம். அரவிந்தன், பு. க. க. ஆரம்பித்துள்ள இப்பிரச்சார இயக்கத்தின் நோக்கம், அவசியம், இலக்குகளை தொழிலாளர்களுக்குத் தெளிவுபடுத்தியதோடு, இ. தொ. கா. தலைவர்கள் யூ. என். பி.யுடனும், சமசமாஜ - கம்யூனிச நவசமசமாஜ தலைவாகள் முதலாளித்துவக் கட்சிகளுடனும் கொண்டுள்ள வர்க்கக் கூட்டினை உடைத்தெறிய தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்ட பு. க. க போராடுவதாகக் குறிப்பிட்டார். அதன் ஓர் ஆரம்பமாகவே இம்மகாநாடு தோட்டத் துறையில் கூட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, தமிழ் தேசிய இனத்தினரின் சுயநிர்ணய உரிமை, கிராமப்புற ஏழைகளுக்கு எதிரான ஒடுக்குமுறையைத் தோற்கடித்தல், பொது வேலைநிறுத்தத்துக்கான தயாரிப்புக்கள், மக்கள் முன்னணியை தோற்கடித்தல் போன்ற முக்கிய அரசியல் பிரேரணைகள் இத்தொழிலாளர் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

## தெலிகமை : பு. க. க அங்கத்தவருக்கு எதிராக கொலை அச்சுறுத்தல்

தெலிகமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் தோழர் வை. ஏ. தர்மசேனவுக்கு எதிரான கொலை அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் அப்பிரதேச யூ. என். பி. பிற்போக்காளர்கள் இறங்கியுள்ளனர். இந்தக் கொலைகார இயக்கத்தின் அரசியல் சுயரூபத்தை மூடிமறைக்கும் பொருட்டு அதை தனிப்பட்ட ஒன்றாக காட்டும் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தோழர். தர்மசேன ஜீவியத்துக்கென தெலிகமை சந்தியில் ஒரு சிறிய கடையை நடாத்தி வருகின்றார். கடந்த மார்ச் 17ம் திகதி இரவு 9மணிக்கு இக்கடைக்கு வந்த ஏ. டபிள்யூ. சஞ்ஜீவ் என்ற குண்டன் சிகரட் வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காமல் இந்த காடைத்தனங்களை ஆரம்பித்துள்ளர்ன். இச்சமயத்தில் சஞ்ஜீவின் தயாரும் அங்கு இருந்துள்ளாள். சிகரட்டுக்கு பணம் கேட்ட போது கடையின் எதிரேயுள்ள கம்பி வலைகளை அறுத்து எறிந்துவிட்டு, தர்மசேன அருகே நின்ற மனைவியையும் தாக்கி உள்ளான். கடைக்குள் சென்ற தர்மசேனவையும் மனைவியையும் தகாத வார்த்தைகளில் ஏசியதோடு 'கம்கறு மாவத்த காரயாவை' பார்த்துக்கொள்தாகவும் மிரட்டியுள்ளான்,

மறுநாள் இந்த காடைத் தனம் பற்றி தோழர். தர்மசேன எட்டியாந்தோட்டை பொலிசில் முறைப்பாடு செய்தார். பொலிசார் வந்த வேளையில் காடையன்சஞ்சே வீட்டில் இருக்கவில்லை. இதைத் தொடர்ந்து தோழர் தர்மசேனவின் கடைக்குவந்த சஞ்சேயின் தாயாரும் சகோதரனும் பொலிசுக்கு முறைப்பாடு செய்ததையிட்டு தர்மசேனவைத் திட்டியதோடு தர்மசேனவுக்கு அடித்தோ அல்லது வேறு கஷ்டங்கள் செய்யாமல் சஞ்சேய் பொலிசுக்கு போகமாட்டான்'' எனவும் மிரட்டினர். பொலிசாரின் அறிவித்தலின் பேரில் தர்மசேன இருமுறை பொலிசுக்கு சென்றபோதிலும் சஞ்ஜீவ் அங்கு வரவில்லை.

ஏப்ரல் 17ம் திகதி இரவு மீண்டும் கடைக்கு வந்த சஞ்செய் பழைய பாணியில் கம்பி வேலியை பிடுங்கி எறிந்ததோடு, சிகரட் கேட்டுள்ளான் கடையுள் நுழைய அவன் எடுத்த முயற்சியை தர்மசேனவும், மனைவியும் தோற்கடித்தனர். இத்தருணத்தில் தான் வாளால் தாக்கப்பட்டதாக சஞ்சேவ் கத்தியதோடு கனக்குத் துணையாக தனது சகோதரனையும் அழைத்துள்ளான்.

கடையை உடைத்து நொருக்கவே இவர்கள் கடையை திறக்க இடமளிக்க முடியாது எனகுறிப்பிட்டுள்ளனர் அதிகாலை இரண்டு மணி வரை இவர்களின் கல்வீச்சுக்கள் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. ஏப்ரல் 20ம் திகதி அங்கு வந்த காடையன் சஞ்சே தர்மசேனவை கொலை செய்வதாகவும் மனைவியை தாக்குவதாகவும் மிரட்டியுள்ளான்.

( 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பு. க. க. மேதினக் கூட்டம்:

# “உலக யுத்தத்துக்கும் காலனித்து

''உலக ஏகாதிபத்திய மூன்றாம் உலக யுத்தத் தயாரிப்புக்களையும் காலனிமயமாக்கலையும் நிறுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதபுரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டு! நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு இன்றைய மே தினத்தில் உலகத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு விடுக்கும அழைப்பு இதுவே. அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினரான நாம், இந்நாட்டின் சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்த தொழிலாளர்களை இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள், கோடானுகோடி கிராமப்புற ஏழைகளை அணிதிரட்ட ஆரம்பிக்குமாறு வேண்டுகின்றோம்.''

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானத்தில் நடாத்திய மேதினக் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''உலகம் பூராவும் உள்ள சகல வகையறாவைச் சேர்ந்த சீர்திருத்தவாத, தேசியவாதத் தலைவர்களும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் தேசிய முதலாளித்துவ கையாட்களும் கையாண்டு வரும் பிரமாண்டமான நாசகார வேலைத்திட்டங்களுடன் அணிதிரண்டு கொண்டுள்ளனர். இலங்கையின் சமசமாஜ. ஸ்டாலினிச, நவசமசமாஜ' இ. தொ. கா மத்தியவாத தலைவர்களும் இதே விதிமுறையையே கையாண்டு வருகின்றனர். குலவத்தின் இறைமையை காப்பதாகக் கூறும் மோசடியின் கீழ் இவர்கள் அனைவரும் ஈராக்குக்கு எதிரான ஏகாதிபத்திய மக்கட் படுகொலை யுத்தத்தினைச் சூழ அணிதிரண்டனர். அவ்வாறே இவர்கள் அவசரகாலச் சட்டங்களுக்கும் தமிழ் தேசிய இனத்தின் சகல ஜனநாயக உரிமைகளையும் நாசமாக்கும் இனவாத யுத்தத்திற்கும் மத்தியில் நடைபெறும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி — சிறீலங்கா முதலாளித்துவக கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுகின்றனர். இவர்கள் ஜனநாயகம் காக்கும் இலட்சணம் இதுதான். தொழிலாளி வர்க்கம் கடந்த காலங்களில் வெற்றி கொண்ட சகல உரிமைகளும் கடும் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ள இன்றைய நிலையில் இவர்கள் தொழிலாள வர்க்கத்தினை ஏமாற்றுவதுடன் மட்டுமன்றி, இந்த மே தினத்தினை தேர்தல் வாக்குறுதிகளை வழங்கும் மேடைகளாக்கியும் உள்ளனர்.

## அழைப்பு

''ஏகாதிபத்திய உலக யுத்த ஆபத்தினைத் தோற்கடிக்கும் பொருட்டு தொழிலாளி வர்க்கத்தினை அனைத்துலகப் புரட்சிகரச் சக்தியாக அணிதிரட்டி வழிநடாத்த நாம் விடுக்கும் அழைப்பினை இத்துரோகிகள் ஒரு காலங்கடத்தும் நடவடிக்கை எனக் கூறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படியானால் இதன் அர்த்தம் — அவர்கள் தொழிலாள வர்க்கத்தின் அன்றன்றாடைய பிரச்சினைகளுக்காகப் போராடுவர் என்பதா? இனவாத யுத்தத்தினை நிறுத்தும் பொருட்டு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்களா? கிராமப்புறங்களில் இடம்பெறும் படுகொலைகளை நிறுத்த அவர்கள் போராடுவார்களா? இது சம்பந்தமான அவர்களின் வரலாறு மிகவும் தெளிவானது. ஆளும் வர்க்கங்களின் இந்தச் சகல அழிவுகளில் இருந்தும் தப்பிப் பிழைக்க முயன்ற, முயலும் சகல மக்கட் பகுதியினரும் இந்தத் துரோகத் தலைவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர்.

''ஆளும் வர்க்கத்தின் இச் சகல தாக்குதல்களும் ஏகாதிபத்தியவாதிகளின் நாசகார வேலைத்திட்டத்தில்இருந்தே பெருக்கெடுக்கின்றது. அவை மூன்றாம் உலக யுத்தத்தின் பேரில்ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டு வரும் தயாரிப்புக்களின் ஆரம்ப நடவடிக்கைகள். துரோகத் தலைவர்கள் தமது காட்டிக் கொடுப்புக்களின் மூலம் உலகத்தினை மீண்டும் கூறு போட்டுக் கொள்ள - ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் மிலேச்ச யுத்தத்தில் பங்கு கொள்ள தமது உஜார் நிலையினைக் காட்டிக் கொண்டுள்ளார்கள்.

''இன்றைய உலக நிலைமையில் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் முகம் கொடுத்துள்ள பேராபத்துக்களையிட்டும் அவற்றைத் தவிர்ப்பதற்கு அச்சக்திகள் கடைப்பிடிக்க வேண்டிய புரட்சிகரப் பணிகள் பற்றியும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் சிந்தனா சக்தியை மழுங்கடிக்க வைக்க இத்துரோகத் தலைவர்கள் செயற்படுகின்றார்கள். ஈராக்குக்கு எதிராக ஏகாதிபத்திய யுத்தம் உண்டுபண்ணிய பேரழிவு விடுக்கும் கடும் எச்சரிக்கை என்ன தெரியுமா? தொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் அவற்றின் படிப்பினைகளைக் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே. ஏகாதிபத்தியச் சார்பு சதாம் ஹுசேனின் முதலாளித்துவ ஆட்சியின் அப்பட்டமான ஆதரவுடன், ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்கிலும் வளைகுடாப் பிராந்தியத்திலும் உள்ள மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட காட்டுமிராண்டி இராணுவத் தலையீட்டின் முன்னிலையில். ஸ்டாலினிஸ்டுகள் தமது நீண்ட கால காட்டிக் கொடுப்புக்கள் மூலம் ஈராக் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும்அரசியல் ரீதியில் நிராயுதபாணிகளாக்கினர். எவ்வாறெனினும் முன்னொருபோதும் இல்லாத வகையிலான மக்கட் படுகொலைகளுக்கும் அழிவுகளுக்கும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களே பலியாகினர்.



பு. க. க. செயலாளர் விஜே டயஸ் உரை நிகழ்த்துகிறார்.

''இன்று ஈராக் மக்களுக்கு மின்சாரமோ, குழாய் நீர் விநியோகமோ கிடையாது. பிரமாண்டமான பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டும், தொற்று நோய்களுக்கு உள்ளாகியும் உள்ள அவர்களுக்கு வைத்திய வசதிகளோ அல்லது ஆஸ்பத்திரி சிகிச்சைகளோ இல்லாது போயுள்ளது. முழு உலகுக்கும் ஏகாதிபத்தியம் சிருஷ்டிக்கப் போகும் தலைவிதி இதுவே. ஐக்கிய நாடுகள் சபையின் தடைகளுக்கு ஆதரவு வழங்கிய சகல கேவலம் தலைமைகளும் கடந்தநூற்றாண்டுகளில் நிலவிய பின்தங்கிய நிலைமைகளுக்குள் மக்களைத் தள்ளிவிடவே ஆதரவு வழங்கியுள்ளனர். அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணையும் தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் ஏகாதிபத்தியத்தினைத் துடைத்துக் கட்டி, இந்த அழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

## இனவாத யுத்தம்

''ஏகாதிபத்தியச் சார்பு இந்த யூ. என். பி. அரசாங்கம் நடாத்திவரும் இனவாத யுத்தத்தின் கீழ் தமிழ் தேசிய இனத்தின் தாயகத்தின் மேல் இடைவிடாது விமானத்தில் இருந்து குண்டுகள் சொரியப் படுகின்றன. ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளதோடு, இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள அகதிகள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 10 இலட்சங்களைத் தாண்டியுள்ளது. தெற்கில் உள்ள கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும் எதிராக இதற்குச்சமானமான இராணுவ - பொலிஸ் ஒடுக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கொலை செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை1 இலட்சத்தை தாண்டியுள்ளது. 9000 பேர் இதற்கென விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட ஒடுக்குமுறை முகாம்களில் தள்ளப்பட்டுள்ளனர். இதன் அர்த்தம், தென்மாகாணங்களில் இடம் பெற்றுவரும் படுகொலைகள் மூலம் குறைந்தது 5 இலட்சம் பேரின் ஜீவியத்துக்கு வழிகாட்டியோர் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது சித்திரவதைமுகாம்களில் தள்ளப்பட்டுள்ளனர்.

''மாதாந்தம் ஆயிரக்கணக்கில் தொழில்களில் இருந்து வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்கள், வாழ்க்கையில் தொழில் செய்யும் வாய்ப்புக் கிடைக்காத 20 இலட்சம் வேலையற்றோர் எண்ணிக்கையையும் இத்துடன் சேர்த்தால் அது நாட்டின் முழுச் சனத் தொகையில் ஐந்தில் இரண்டு பங்காகும். அவர்களிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தலைவிதி மரணமும் தலையெடுக்க முடியாத தரித்திரமுமே. 1948ன் மோசடி சுதந்திரத்தின் பின்னர் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் அவர்களின் குட்டி முதலாளித்துவ கையாட்களும் வாயடித்துக் கொண்ட 'மீட்சிக்கான தேசியப் பாதை' பற்றிய வேறு பெரும் மோசடி ஏதும் இருக்க முடியுமா?

''ஸ்டாலினிஸ்டுகளும் சீர்திருத்தவாத சமசமாஜ — நவசமசமாஜ தவைவர்களும் மற்றும் திரிபுவாதக் கும்பல்களும் இந்தியத் துணைக் கண்டத்தினை ஏகாதிபத்திய நலன்களுக்கு ஏற்ப வெட்டிக் கொத்தி அமைக்கப்பட்ட தேசிய அரசு அமைப்பு எனப்பட்டதை முற்போக்கானதெனக் கூறிக்கொண்டனர். இன்று மீண்டும் மரண நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு ஏற்ப இந்த அரசுகளை திரும்பவும் கூறு போட்டு, காலனிகளாக்கும் ஏகாதிபத்தியத் திட்டங்களுக்கு இத்துரோகத் தலைவர்கள் ஆதரவளிக்கிறார்கள். இரண்டாம், மூன்றாம் அகிலங்களைப் பொறுத்தமட்டில் இடம்பெற்றமை ப் போலவே தேசிய அரசுகளின் நாற்றமெடுப்பும், வீழ்ச்சியும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்துக்குப் புறமுதுகு காட்டிய சகல தேசியவாதத் தலைவர்களையும் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் இழுத்துச் சென்றுள்ளது.

''உறுதியான செலாவணி வீதத்தினையும் உலகம் பூராவும் பரந்து கிடந்த மூலதனத்தினையும் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆளுமையின் கீழ் நடாத்தப்பட்டு வந்த ஆளும் ஏகாதிபத்தியத்தின் யுகம்முடிவடைந்து, இந்நூற்றாண்டின் முதற் பாகத்தில் இரண்டு உலகயுத்தங்களுக்குள் உலகினைத் தள்ளிய ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளன.

## லெனின்

''ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின உச்சக் கட்டம்' என்ற தமது புகழ்பெற்ற நூலில் லெனின்சுட்டிக்காட்டியவாறு ஏகபோக முதலாளித்துவத்தின் அபிவிருத்தியின் மூலம் தூர மூலையில் உள்ள இடம் கூட உலகச் சந்தையுடன் இணைக்கப்படுவதோடு அந்த அபிவிருத்தியில் சமத்துவமின்மையும் வளர்ச்சி காண்கிறது. இந்த வளர்ச்சியின் சமத்துவமின்மையானதுசக்தி மிக்க ஏகாதிபத்திய சக்திகளை அவற்றின் ஆளுமையில் இருந்து மேலிருந்து கீழாக இறக்குவதாகத் தொழிற்படுகின்றது. இந்நூற்றாண்டின் முதல் கால்நூற்றாண்டினுள் பிரித்தானியா தொடர்பாகச் செயற்பட்ட இப்போக்கானது பிரித்தானியாவின் பின்னர் அதனிடத்துக்கு வந்த அமெரிக்கா தொடர்பாகவும் இதே விதத்தில் செயற்பட்டுள்ளது. உலக ஏகாதிபத்திய முறையைக் காக்கவும் மீண்டும் கட்டி எழுப்பவும் தோள் கொடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று மோசமான நெருக்கடிக்குள் மூழ் ளது. அது பெரும் கட நாடு மட்டுமன்றி மாதா உயர்ந்துவரும் வர்த்தகப றாக்குறைக்கும்முகம்கெ துள்ளது. அமெரிக்க ஏ பத்தியவாதிகள் இன்று கொள்ளும் முதலாளித் தின் புதிய அமைப்பா பொருளாதார பலத் சணக்கிட்டு அதை அடிப்ப யாகக் கொள்ளாமல் ணுவ பலத்தினை அடிப்ப யாகக் கொண்டுள்ளது. ளம் முழுவதும் நடாத்து தத்தின் மூலம் தமது ஏ பத்திய நலன்களைப் பூ செய்து கொள்ள அமெ ஏகாதிபத்தியவாதிகள் செய்துள்ளனர். ஈராக் எதிரான யுத்தத்தில் — சிறிய பிராந்தியத்தில் னையே அமெரிக்க ஏகா தியவாதிகள் ஒத்திகை பார்த்தனர். இதனா அனைத்துலகக் குழு, குடா யுத்தத்துடன் உ படத்தினை திருப்பி வ ஏகாதிபத்தியச் சக்திக இடையே உலகத்தினை போடும் உலக யுத்தம் ஆ மாகிவிட்டது எனச் சு காட்டியது.

''தொழிலாள வர்க்க யும் ஏழைமக்களையும் த்தமட்டில்—இலங்கை - யாபோன்ற நாடுகளில் அர்த்தம் மக்கட் படுகெ கள், பட்டினி, தே நோய்களின் மத்தியில் நீட்டிய காலனித்துவ களை அந்நாடுகளின் வ

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கைக் இளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சோஷலிஸ்டுகளும் மிகவும் சக்திவாய்ந்த மேதின வலத்தையும், கூட்டத்தையும் கொழும்பு நகரில் ந தினர்.

நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் 250 அதிகமானோர் பலம் வாய்ந்த மேதின ஊர்வல கலந்து கொண்டதோடு கொட்டாஞ்சேனை இரத் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நூற்றுக் கான தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இ கள் வருகை தந்திருந்தனர். நகர்ப்புற, தோட்டத் தொழிலாளர்களும் படுபயங்கரமான சுரண்டலுக்கு ளாகியுள்ள சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த லாளர்களும், வட—கீழ் மாகாண தமிழ் ஒடுக்கப்ப ரும் கிராமப்புற ஏழை விவசாயிகளும் மாணவர் நலமான பகுதியினரும் ட்ரொட்ஸ்கிசப் பதாகையி அணிதிரண்டிருந்தது சிறப்பம்சமாக விளங்கியது.

பு. க. க. ஊர்வலத்தினதும், கூட்டத்தினதும் புச் செய்தியாக ''ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் கா துவத்துக்கும் எதிராக பாட்டாளி வர்க்கத்தை திரட்டு'' என்பது விளங்கியது. நான்காம் அகில அனைத்துலகக் குழுவின் சகல கிளைகளதும் மே செய்தியின் அடிநாதமாக இதுவே விளங்கிற்று.

கொழும்பு கொட்டாஞ்சேனை (கொச்சிக்கடை ஹாம் மைதானத்தில் இருந்து ஆரம்பமான மே ஊர்வலம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் நி பகுதிகளூடாக—அவர்களின் பேராதரவுடன் இரத் மைதானத்தை வந்தடைந்தது.

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்''! ' சோசலிசப் புரட்சிக்குப் போராடு!'' 'ஏகாதிபத் ஒழிக''! 'ஏகாதிபத்தியத்துக்கும் காலனித்துவத்து இடமளியாதே'! 'ஈராக்கில் இருந்து ஏகாதிபத்தியப் களை வெளியேற்று'! 'சோவியத் யூனியனில் முதல துவப் புனருத்தாரணத்தைத் தோற்கடி!'' அரசியல் சிக்கு போராடு!,'' இந்திய துணைக் கண்டத்தின் லிசப் புரட்சிக்கு வெற்றி!'' 'இலங்கை — தமிழ் சோசலிச குடியரசுக்குப் போராடு!'' 'வடக்கு—கிழ இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று!' ' தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துவத்துக்கும் எதிரான போராட்டம் தீர்க்கமானது

**— விஜே டயஸ்**

மூழ்கியுள்
கடனாளி
மாதாந்தம்
ர்த்தகப் பற
கம்கொடுத்
க்க ஏகாதி
இன்றுபேசிக்
ாளித்துவத்
மைப்பானது
பலத்தை
அடிப்படை
ாமல் இரா
அடிப்படை
ளது. பூசோ
ாத்தும்யுத்
மது ஏகாதி

றில் திரும்பவும் புகுத்துவதே. ஈராக்கிய மக்கள் இன்று இதற்கே முகம் கொடுத்துள்ளனர். தேசிய முதலாளிவர்க்கத்தின் சகல பிரிவினரும், தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் தலைமையில் உள்ள சகல குட்டி முதலாளித்துவத் துரோகத் தலைவர்களும்உலக ரீதியில் இடம்பெற்றுவரும் இந்த அழிவின் பங்குதாரர்களாகத் தயாராக உள்ளனர். ஈராக்கிய ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறையின்கீழ் குழம்பிப்போன குர்திஷ் களை வரவேற்பதில் குர்திஷ் தேசிய இனத்தினைச் சேர்ந்த தேசிய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசியவாதத் தலைவர்கள் இறங்கியுள்ளனர். இதனைப் பார்க்கையில் தமிழீழ விடுதலை புலிகள், உட்பட புளொட், ஈபீஆர்எல்எப், ஈரோஸ், டெலோ மற்றும் தமிழ் குட்டி முதலாளித்துவத் தலைவர்கள், 1987ல் ஏகாதிபத்தியவாதிகள் ஜயவர்தன — ராஜீப் காந்தியை மையமாகக் கொண்டு புதுடில்லியில் திணித்த இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு

களில் திணிக்கப்பட்ட தேசியப் பொருளாதாரம் எனப்படுபவை ஏகாதிபத்திய வங்கியாளர்களின் தலையீட்டின் மூலம் ஏற்கனவே சிதறடிக்கப்பட்டு வருகின்றன. இந்நாட்டின் அரசாங்கத் திணைக்களங்கள், முதலாளித்துவத் தேசியமயத்தின் கீழ் கூட்டுத்தாபனங்களாக்கப்பட்ட அநேக கைத்தொழில்கள் ஏகாதிபத்திய ஏகபோகங்களின் பேரில் ஏலவிற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இவை தனியார்மயமாக்கல், மறுசீரமைப்பு என்ற பேரில் முன்னைய முதலாளித்துவ தேசியமயமாக்கத்துக்குப் பதிலாக இன்று 'மக்கள்மயமாக்கம்' என்ற பேரில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

''இலங்கை பங்குமுதல் சந்தைகாரர்களின் தலைவரான என். யூ. ஜயவர்தனா 1948ல் இருந்து இந்நாட்டில் அமுலில் இருந்து வந்த வெளிநாட்டுச் செலாவணி நிர்வாக விதிகள் அனைத்தையும் அரசாங்கம் நீக்கி வருவதாகக் குறிப்பிட்டார். இத்திசையில் கடந்த ஆண்டுகளில் அரசாங்கம் எடுத்த பல நடவடிக்கைகளை அவர் குறிப்பிட்டுள்ளார். 1990 ஜூன் 6ம் திகதி இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் வெளிநாட்டுவர்த்தகர்கள் இந்நாட்டு வர்த்தகங்களின் பங்குகளைக்கொள் முதல் செய்யும் போது செலுத்த வேண்டியிருந்த நூற்றுக்கு ஐந்துவீதம் வரி முழுமனே இரத்துச் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் 16ம் திகதி அமுலுக்கு வந்த ஒரு புதிய விதியின் மூலம் பங்குமாற்ற நடவடிக்கைகளில் அவை ஓராண்டுக்குள் கைமாற்றப்படின் செலுத்த வேண்டிய செல்வ வரி நூற்றுக்கு 15% வரை குறைக்கப்பட்டுள்ளது. ஓராண்டின் பின்னர் இடம்பெறும் அத்தகைய வர்த்தகத்தில் எதுவிதமான வரியும் அறவிடப்படமாட்டாது. இவை பன்னாட்டுக் கம்பனிகளின் மூலதனப் பாய்ச்சலுக்கு கட்டுப்பாடின்றி கதவுகளைத் திறக்கும் நடவடிக்கைகளாகும்.

''உலக வங்கி உதவியைக் கொண்டு நடாத்தப்பட்டு

பத்திய மூலதனத்தின் ஊடுருவலானது ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் தவிர்க்க முடியாதது. லெனின் சுட்டிக்காட்டியது போல் ஏகபோகங்களின் வளர்ச்சியோடு கட்டுப்பாட்டுக் குட்பட்டதும், கட்டுப்பாட்டுக்குட் படாததுமான நிறுவனங்களுக்குஇடையேயான போட்டி உச்சக் கட்டத்தை அடைகிறது. அது ஏகபோகங்களுக்குச் சார்பாகவே தீர்த்து வைக்கப்படுகின்றது. தொண்டை நீர்வற்றும் வரையில் தேசியப் பொருளாதாரங்களைக் காப்பதாக வாக்குறுதியளித்த தேசிய முதலாளிகள் இன்று பன்னாட்டு ஏகபோகங்களின் கனிஷ்ட ஏஜந்துகளாகுவதற்கு வரிசையில் நிற்கிறார்கள். தேசியப் பொருளாதாரம் எனப்படுபவற்றின் வீழ்ச்சியும் முதலாளி வர்க்கத்தினதும் தீவிரவாத குட்டி முதலாளித்துவ தட்டினர் ஏகாதிபத்திய மூலதனத்தின் பின்னர் இழுபட்டுச் செல்வதையும் ஸ்டாலினிஸ்டுகளின் பெரோஸ்ரொயிகா வேலைத்திட்டம் நன்கு சுட்டிக்காட்டுகின்றது, வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரி சலுகைகளை வழங்க வேண்டும் என நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் பிரச்சாரம் செய்வதானது இந்த ஏகாதிபத்தியச் சார்பு நலன்களுடன் இணைந்து கொள்ள தேசியவாதசந்தர்ப்பவாதிகளுக்கு இருந்து வரும் அவசியத்தினைக் காட்டுகின்றது. அவர்கள் அன்று யூ.என்பி—சிறீலங்கா முதலாளிகளை தேசிய இறைமையின் பாதுகாவலர்கள் எனக் காட்டி வந்ததைப் போலவே இன்று முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளிடம்நாட்டைப்பலியிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வேளையில் அதன் அப்பட்டமான இரட்சகர்களாகியுள்ளனர்.

'நாம் மீண்டும் லெனினை ஆய்ந்து பார்ப்பின், பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் ஏகபோகங்களின் வளர்ச்சிக்கு ஆசீர்வாதங்கள் கூறப் போவதும் இல்லை; அல்லது

கப்பட்டுவரும் உற்பத்திச் சக்திகளை மனிதஇனத்தின் நலனுக்காக உபயோகிக்கும் பொருட்டு அவற்றை முதலாளித்துவ வர்க்கத்தின் கரங்களில் இருந்து பிடுங்கிக் கொள்ள தொழிலாளர் வர்க்கத்தினைத் தயார் செய்வதாகும்.

''இந்த ஏகாதிபத்திய ஏகபோகங்கள் இலாப—அடிமை உழைப்பினைதேடிக்கொண்டு பின்தங்கிய நாடுகளில் பாய்ந்து விழுகின்றன. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களை மாதாந்தம் இலட்சக் கணக்கில் வேலைநீக்கம் செய்கிறார்கள்— அந்நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் வேலையின்மையை பக்டரி மூடுவிழாக்கள் மூலம் உயர்த்துகிறார்கள், இதற்கிடையே இந்நாடுகளின் அதிகாரத்துவங்கள் சகலவிதத்திலும் ஏகபோகங்களின் இலாப பகற்கொள்ளையின் பொருட்டு இடம்பெறும்இந்த அழிவுகளுடன் 'கோர்பரேட்' ரீதியில் அணிதிரண்டு நிற்கிறார்கள். ஏற்றுமதிக்காக மூலதனத்தினை மலையெனக் குவிக்கும் பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளின்பிற்போக்கு ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வரும் அதே வேளையில் அவர்கள் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும், சகல உதவிமானியங்களையும் ஒழித்துக்கட்ட செயற்பட்டு வருகின்றார்கள். இவற்றுக்கு எதிராகசீர்திருத்தவாத.ஸ்டாலினிச தலைவர்கள் எந்தவிதமான போராட்டமும் நடாத்தாது இருந்து வருகின்றரர்கள்.

''உலகம் பூராவும் தொழிலாள — ஒடுக்க படும் மக்களுக்கு எதிராக — ஏகாதிபத்திய நாடுகளிலும் சரி, பின்தங்கிய நாடுகளிலும் சரி, ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலும் சரி துரோகத் தலைவர்கள, பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடன் ஒன்றிணைந்து கொண்டுள்ளனர். உலக ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் இச் சகல நாடுகளிலும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினையின் ஒருமைப்பாடு என்னவெனில் இம்பாரம்பரியக் கட்சிகளின் தலைமையில் உள்ள துரோக அதிகாரத்துவங்களின் காட்டிக் கொடுப்புக்களுக்கு எதிராக சகலநாடுகளதும் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களை தொழிலாள வர்க்அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தியத்தினைத் தூக்கிஎீசும் புரட்சிகரப் போராட்டங்களுக்கு அணிதிரட்ட வேண்டும் என்பதேயாகும். இந்த வரலாற்று அழைப்பு, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினையும் அதன் கிளைகளையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

''ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி. அரசாங்கத்தைப் பயன்படுத்தியும் அவ்வாறே

(6ம் பக்கம் பார்க்க)

---

ழவின் இலங்
முழும் இளம்
மதின ஊர்
ரில் நடாத்

ழ் 250க்கும்
ஊர்வலத்தில்
இரத்தினம்
ற்றுக்கணக்
, இளைஞர்
ட்டத்துறை
லுக்கு உள்
ர்ந்த தொழி
க்கப்படுவோ
ணவர்களின்
கையின்கீழ்
பது.

ணதும் சிறப்
தும் காலனித்
தை அணி
அகிலத்தின்
ம் மேதினச்
லு.

க்கடை) நியூ
ன மேதின
ள் நிறைந்த
இரத்தினம்

ல்''!'உலகச்
காதிபத்தியம்
துவத்துக்கும்
தியப் படை
முதலாளித்
ரசியல் புரட்
த்தின் சோச
தமிழ் ஈழம்
கு—கிழக்கில்
ற்று!' 'தமிழ்
டத்தரவாதம்

செய்!'' கிராமப்புற படுகொலைகளை நிறுத்து!'' அரசியல் கைதிகளை விடுதலை செய்!'' 'உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிராக பொதுவேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்!'' 'சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களை சி. ல. சு. க.வுடனான கூட்டினை உடைக்க கோரு! 'இ. தொ. கா. தலைவர்களை அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரு!'' யூ. என். பி.யை வெளியேற்ற போராடு!' தோட்டங்கள், வங்கிகள், கம்பனிகளை தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கு! 'சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களை காப்பாற்று!' 'இலவசக் கல்வியை காப்பாற்று'! இச்சுலோகங்கள் ஊர்வலத்தின் பதாகைகளிலும், சுலோக அட்டைகளிலும் இடம் பிடித்துக் கொண்டிருந்தன.

பு. க. க மத்தியகுழு உறுப்பினர் தோழர் நந்த விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பு. க. க. பொதுச் செயலாளர் விஜே டயஸ், பு. க. க. மத்திய குழு உறுப்பினர்களான தோழர்கள் தேவராஜா டபிள்யூ எ, சுனில் 'கம்கறுமாவத்த' ஆசிரியர் தோழர் கே,இரத்நாயக்க இளம் சோஷலிஸ்டுகள்இயக்க செயலாளர் தோழர் சமன் குணதாச ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

முதலாளித்துவ பொதுஜனத் தொடர்பு சாதனங்கள் தொடக்கம் நவசமசமாஜ கட்சி வரை சகல அமைப்புக்களதும் மேதினம் பற்றி பிரச்சாரம் செய்த போதிலும் பு.க க. மேதினம் பற்றி ஒரு வார்த்தையும் குறிப்பிடவில்லை, மேதினக் கூட்டம் நடைபெற்ற வேளையில் வந்த யூ. என். பி. அரச பத்திரிகை நிறுவனமாகப் புகழ்பெற்ற ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒன்றான 'தினமின' நிருபர்கள், கூட்டம் பற்றி வதந்திகளை வாந்தி எடுத்திருந்தனர். பொலிசார் மே தினத்துக்கு முதல் நாள் பு. க. க ஊர்வல பாதையையும் மாற்றினர்.


முதலாளித்துவ பிற்போக்கினதும் அரசினதும் தலையீடுகளுக்கு மத்தியில் பு. க. க. நடாத்திய மேதினம் ஆயிரமாயிரம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை ஈர்க்கும் மேதினமாகியது.

இத்துடன் பு. க. க. பொதுச் செயலாளர் தோழர் விஜே டயஸின் மேதின பேச்சு பிரசுரமாகிறது. ஏனைய பேச்சுக்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

---

ளைப் பூர்த்தி
அமெரிக்க
திகள் முடிவு
ஈராக்குக்கு
த்தில் — ஒரு
பத்தில் இத
க ஏகாதிபத்
திகை செய்து
இதனாலேயே
குழு, வளை
ன் உலகப்
ப்பி வரையும்
சக்திகளுக்கு
த்தினைக்கூறு
த்தம் ஆரம்ப
னச் சுட்டிக்

வர்க்கத்தை
ளையும் பொறு
ங்கை - இந்தி
களில் இதன்
படுகொலை
, தோற்று
தியில் தலை
த்துவ ஆட்சி
ளின் வரலாற்



பு. க. க மே தினக் கூட்டத்தில் திரண்டிருந்த தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களில் ஒரு பகுதியினர்.

குர்திஷ் அகதிகளைக் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு, முகாம்களை அமைப்பதில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதி

அடிபணிந்தமையை நினைவுபடுத்துகின்றது.

''இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பின்தங்கியநாடு

வந்த இந்த தேசிய நிறுவனங் ... ரோகத்தின் அடிப்படையில் இடம் பெறும் இந்த ஏகாதி

அதைக் கோரி நிற்கவும் இல்லை. ஏகபோகங்களின் வளர்ச்சியோடு உலகளாவிய ரீதியில் மேலும் சமூகமயமாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்குப் ..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய சிறிலங்கா — மக்கள் கட்சி — வெஜகுன கட்சி முதலான முதலாளித்துவக் கட்சியையும் அவற்றின் பின்னால் வயிறளக்கும் துரோகத் தலைவர்களின் பூரண ஆதரவை பயன்படுத்துவதன் மூலமும் ஏகாதிபத்தியவாதிகள் இந் நாட்டில் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மீது 10ம் நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் நிலவிய முதலாளித்துவ ஆட்சியை திணிக்க முயல்கிறார்கள். இதன் அர்த்தம் என்ன? ஏகாதிபத்திய மூலதனத்தின் ஊடுருவலுடன் ஏற்பட்ட அழிவுகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த 1848 கிளர்ச்சி விவசாயிகளின் மேல் துப்பாக்கி குண்டுகளைச் சொரிந்த டொரிங்டன் தேசாதிபதியின் நிர்வாகத்தை இங்கு மீண்டும் திணிக்க வேண்டும் என்பதே. இந்நாட்டுத்தொழிலாள வர்க்கம் அரசியல் ரீதியில் தனது தலையை உயர்த்த முயன்ற இந்நூற்றாண்டின் முதற்பாகத்தில் அவர்களை இனவாதத்தின் மூலம் பிளவுபடுத்தி சுக்குநூறாக்கும் பொருட்டு 1915ல் சிங்கள — முஸ்லிம் கலவரத்தினைத் தூண்டிவிட்டு, நூற்றுக்கணக்கானோரைசுட்டுத்தள்ளியமக்களின் வெறுப்புக்கு பாத்திரமான பொலிஸ் அதிபர் டப்பிகின் பாணியிலான பிற்போக்கு ஆட்சியை உண்டுபண்ண பிற்போக்கு ஆளும் வர்க்கம் முயல்கிறது. தமது குறைந்தபட்ச உரிமைகளுக்காகக் கிளர்ந்து எழுந்ததோட்டத் தொழிலாளர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம்செய்து 1939ம் ஆண்டின் முல்லோயா வேலை நிறுத்தத்தின் போது கோவிந்தனைகொலை செய்த ஆட்சியை மீண்டும் உண்டுபண்ணுவதே அவர்கள் இலக்கு. தமதுசுதந்திரம்எனப் பட்டதை வழங்குவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத் தலைவர் கந்தசாமியை வீதி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வைத்து சுட்டுக்கொன்றஏகாதிபத்திய ஆட்சி மீண்டும் உருவாகும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. ஏகாதிபத்தியவாதிகளின் மூன்றாம் உலக யுத்தத்தினதும் காலனிமயமாக்கலினதும் வேலைத்திட்டத்தின் இலக்கு இவைதான், இதற்கு முகம் கொடுக்கவும் அதைத் தோற்கடிக்கவும் அவசியமான அரசியல் தயாரிப்புக்கு தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை தயார் செய்ய வேண்டும்.

''தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே உயர்ந்த அரசியல் தெளிவினை உண்டுபண்ணுவதன் மூலமே இப்பணியினை இட்டு நிரப்ப முடியும், இப்பணிக்குத் தகுதியானவர்கள் யார்?

''இந்தியாவை மத அடிப்படையில் பிரித்தும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் மதக் குழுக்களையும் இனவாத ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் கீழ் அடிமைப்படுத்துவதற்கும் 1947—48ல் திணிக்கப்பட்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரச அமைப்புக்கு எதிராகவும் இந்தியத் துணைக்கண்டத்தில் கிளர்ந்து எழுந்து நான்காம் அகிலமும் அதன் துணைக்கண்ட கிளையான போல்ஷிவிக் - லெனினிஸ்ட்கட்சியுமேயாகும். தேசிய முதலாளித்துவ ஆட்சிகள் எனப்பட்டவை ஏகாதிபத்தியத்தின் பேரில் இருந்துவந்த காபந்து அரசாங்கங்கள் என்பது இன்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

''நான்காம் அகிலத்தின் புரட்சிகர உலக முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் காட்டிக் கொடுக்கவும் உலகக் கட்சியைக் கரைத்துவிடவும் தொழிற்பட்ட பப்லோவாதத் திரிபுவாதத்துக்கு எதிராக 1953ல் இருந்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுமட்டுமே தொடர்ந்து போராடியது. ஸ்டாலினிஸ்டுகளுக்கும், தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் புரட்சிகர சோடனை போட்டு, தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரத்தினை பூசிமெழுகிய பப்லோவாதத்தினை புதிய முறையில் அரவணைத்துக் கொண்ட பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தேசியவாத சந்தர்ப்பவாத ஓடுகாலிகளுக்கு எதிராக 1982 85 வரை அனைத்துலகக் குழு போராடியது. இக்காலப்பகுதியில் நடாத்திய அரசியல், கோட்பாட்டு போராட்டங்கள் மூலம் உலக சோசலிசப் புரட்சியின் அனைத்துலகக் வேலைத்திட்டத்தினை காக்கவும், அதன் அடிப்படையில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டவும் அனைத்துலகக் குழு உலக ரீதியில் பலம் பெற்றுள்ளது.

''நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, சகல வகையறாக்களைச் சேர்ந்த திரிபுவாதங்களுக்கும் எதிராக இற்றைக்கு 38 ஆண்டுகளாக நடாத்தி வரும் நீண்ட போராட்டத்தில் கூராக்கப்பட்டவிஞ்ஞான சோசலிசத்தின் விமர்சன ஆயுதத்தினை உயர்த்துவதற்கான தருணம் வந்துவிட்டது. அதற்குக் காரணம், உலகம் பூராவுமுள்ள தொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் ஏகாதிபத்தியத்றுக்கும் அதன் கைக்கூலி முதலாளித்துவ, அதிகாரத்துவ ஆட்சியாளர்களுக்கும் எதிராக நடாத்தும் போராட்டமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலகப் புரட்சிகர முன்நோக்கு வேலைத்திட்டத்துடன் ஒன்றிணையும் கால கட்டத்தினுள் நாம் காலடி வைத்துள்ளதேயாகும். உலக சோசலிசப் புரட்சிக் கட்சியின் ஊடாக மட்டுமே உலகப் பிற்போக்குக்கு எதிரான மக்களின் போராட்டத்துக்கு புரட்சிகரப் பாதையைத் தேடிக் கொள்ள முடியும்.

''இப் போராட்டங்களுக்கு புறமுதுகு காட்டுவதுடன் மட்டுமன்றி, அவற்றை [illegible] முழுப்பலமும் கொண்டு [illegible] டிக்கச் செய்யவும் துரோகத் தலைவர்கள் வெளிவெளியாகத் தொழிற்படுகின்றனர். முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கு நின்றுவரும் சமசமாஜ தலைவர்கள், சிறீலங்காகாரர்கள் தமக்கு இழைத்த துரோகத்துக்காக தலைதூக்க முடியாத சோகத்துக்குள்ளாகி உள்ளனர் கொழும்பு நகரில் மேதினத்தைக் கொண்டாடுவது எமது அரசியலுக்கும் எமது உயிர் வாழ்வுக்கும் அவசியமானது, எனக் கூறிக்கொண்டே மேதினத்தை வேறாக கொண்டாட முடிவு செய்தனர். பே. னாட் சொய்சா கையெழுத்திட்டு கட்சி அங்கத்தவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் இப்படி கூறியிருந்தார். அவர்கள் பேசுவது தொழிலாள வர்க்கத்தின் உயிர் வாழ்வைப் பற்றி அல்ல. மரணத்துக்குள் தள்ளப்பட்டு சேடமிழுப்பவர்களைப் போன்று தமது உயிர் வாழ்வை காக்கவே இவர்கள் புலம்புகின்றனர்.

''இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் இம்முறை மேதினக் கூட்டம் நடாத்துவதை நிறுத்திவிட்டு தமது தொழிற்சங்கங்களை தொழிற்சங்க முன்னணிஎனப் படுவதில் இருந்து, ஊர்வலத்துள் தள்ளியுள்ளார்கள். இதுவரை காலமும் ஸ்டாலினிச பதாகையின் கீழ் தொழிலாள வர்க்கத்தினை முதலாளித்துவத் கட்சிகளுடன் கட்டிப்போடச் செயற்பட்டு வந்த இத்துரோகிகள் இன்று அரசியல் பதாகையை முழுமனே முதலாளிகளிடம் ஒப்படைத்துள்ளார்கள். அவர்களின் சுலோகம் என்ன தெரியுமா? ''நாம் தொழிற்சங்கத்தை நடாத்துவோம். முதலாளிகள் அரசியலை நடாத்தட்டும்'' என்பதே,

''இதற்கிடையே படுகேவலமான நடவடிக்கைகளில் நவ சமசமாஜ தலைவர்கள் இறங்கியுள்ளனர். அவர்கள் உள்ளூராட்சி சபை தேர்தலில்போட்டியிடும் விதம் இதற்கு நல்ல உதாரணம். மார்ச் 19ம் திகதி நவசமசமாஜ தலைவர் விக்கிரமபாகு கருணாரத்னாவின் கையொப்பமுடன் கட்சி கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் கூறுவதாவது: சி. ல. சு. க.வுடனோ அல்லது யூ. என். பி. யுடனோ முரண்பட்டு விலகிக் கொள்ளும் நல்ல தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, அவர்களைப் பாவிக்க முயற்சிக்க வேண்டும்'', இதன் அர்த்தம் என்ன தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தில் ஈடுபட்டும் கிராமப்புற ஏழைகளுக்கு எதிரான படுகொலைகளில் ஈடுபட்டு டயர்போட்டு சுட்டுப் பொசுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்தவர்களுடனும் நவசமசமாஜ கட்சி இணைந்து [illegible] என்பதே [illegible] லாளிக்கும் இக்கட்சியுடன் உறவு வைக்க முடியுமா?

## புரட்சிகர விதிமுறைக்கு பேராதரவு

''இவை தொழிலாளவர்க்க இயக்கத்தில் இருந்து இந்தத் துரோகிகளை ஒதுக்கித்தள்ளுவதற்கான கிளர்ச்சியில் இறங்குவதற்கான காலம் வந்து விட்டதைச் சுட்டிக் காட்டுகின்றன. தொழிலாள ஒடுக்கப்படும் மக்களிடையே இந்த சமிக்கையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகளுமே உரிய முறையில் கணக்கெடுக்கின்றன. இதற்கு இம்மக்களிடையே அதற்கு கிடைத்து வரும் ஆதரவு நல்ல சான்று.

''இதையிட்டு சகல துரோக அதிகாரத்துவங்களும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் கதிகலங்கியுள்ளன என்பதை நாம் அறிவோம். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஊர்வலம், கூட்டம் பற்றி முதலாளித்துவ பத்திரிகைகளும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் எதுவும் குறிப்பிடாதது இதனையே காட்டுகின்றது.

''எனினும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தனது கிளைகள், இளைஞர் அமைப்பின் ஊடாக விடுத்த அழைப்புக்கு ஆதரவு காட்டி இந்த ஊர்வலத்தையும் கூட்டத்தையும் பலப்படுத்த சகல மாகாணங்களில் இருந்தும் தோழர்கள் கலந்து கொண்டது உற்சாகமளிக்கின்றது. தோட்டத் துறையில் இருந்தும், சுதந்திர வர்த்தக வலயத்தில் இருந்தும் கிராமப்புறங்களில் இருந்தும், ஈழம் போராளிகள், கிராமப்புற இளைஞர்கள் நகர்ப்புற தொழிலாளர் பகுதியினருடன் இக் கூட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர். இது புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இச் சகல சக்திகளையும் அணிதிரட்ட முடியும் என்பதை நடைமுறை ரீதியில் நிரூபித்துக் காட்டியுள்ளது.

## இலங்கை தமிழ் ஈழம் சோசலிச குடியரசு

''எனினும் முதலாளித்துவ யூ, என். பியை வெளியேற்றி இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச சோவியத் குடியரசினைக் கட்டியெழுப்ப—இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றிய முன்நோக்கின் அடிப்படையில் கட்டியெழுப்ப நாம் நடாத்த வேண்டிய போராட்டம் பெரும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது, எவ்வாறெனினும் எமது முன்நோக்கின் விஞ்ஞான பூர்வமான தன்மைக்கும் எமது வேலைத்திட்டத்திற்கும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்று அவசியத்துக்கும் இடையே நிலவும் ஆழமான தொடர்பும், இந்தப் பணியை வெற்றி கொள்வதை உறுதி செய்யும் நியந்தனையாகும். இதற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு நாம் அனைவரையும் வேண்டுகின்றோம்,

## பு. க. க. அங்கத்தவருக்கு . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசில் தொடர்ந்தும் காடையன் சஞ்சே ஆஜராகாததால் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதாகவும், கடையைத் திறக்கும்படியும் பொலிசார் தோழர். தர்மசேனவுக்கு கூறி சென்றனர், ஆனால் பொலிசார் இவர்களை தேடி கண்டு பிடிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தெலிகமை அங்கத்தினர்கள் பிரதேசத்தில் கிராமப்புற படுகொலைகளுக்கெதிராகவும் தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கவும் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதையிட்டு யூ. என், பி. காரர்கள் குழம்பிப் போயுள்ளனர். இது உள்ளூராட்சிச் சபை தேர்தல் காலத்தில் உக்கிரம் கண்டது.

தோழர். தர்மசேனவுக்கு எதிரான கொலை அச்சுறுத்தலை மிகவும் பாரதூரமானதாகக் கொள்ளும் பு. க. க, தோழருக்கு ஏதும் இடம் பெறின் அதற்கு இக்குண்டர்கள் மட்டுமன்றி இத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரியவரும் சகல பிற்போக்காளர்களும் பொறுப்பாளிகளாவர். இக்கொலை அச்சுறுத்தலை கண்டிக்கும் படியும், தலையிடும்படியும் பு. க. க. தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் இயக்கங்களை வேண்டிக் கொள்கின்றது.


# தொழிலாளர் பாதை

## சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட

''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 6.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் — ரூ. 72.00

பெயர் :..................................

முகவரி :..................................

சந்தாக் காலம் :.............. ரூ: ......... சதம் .........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யூ. என். பி. அரசாங்கம் உக்கிரமாக்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசாவினால் ஆணையிடப்பட்டுள்ளது.

இவையாவும் பிரேமதாச அரசாங்கத்தினதும் முதலாளித்துவத்தினதும் செருபத்தையே காட்டுகின்றன. நெருக்கடியின் உச்ச கட்டத்தில் சென்று நாற்றமடிக்கும் வங்குரோத்துற்ற பிற்போக்கின் இறுதிக்கு தள்ளப்பட்ட அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமுமே இங்ஙனம் செய்கின்றன.

அவர்கள் தொழிலாள.ஒடுக்கப்பட்ட மக்களை மரணம் அழிவு, வேலையின்மை கொலை. பஞ்சத்தின் பிடிக்குள் தள்ளிவிட முயற்சிக்கின்றனர். அத்துடன் மக்களின் இரத்தத்தினை குடிக்கவும் இரும்புச் சப்பாத்துகளால் நசுக்கவும் ஏகாதிபத்தியவாதிகளது காலனித்துவ தேவைகளுக்கேற்ப கொடிய சுரண்டலுக்கு இவர்களை பலிகடாக்கள் ஆக்கவும் துடிக்கின்றனர்.

தமிழர் விரோத இனவாத கோஷத்துடன் யுத்தத்தை கொண்டுநடத்தும் இவ்வரசாங்கத்தினதும் முதலாளிகளினதும் மிகக்கேவலமான பிற்போக்குத் தன்மை, அவர்கள் பாதுகாப்பதாக கூறும் ''சிங்கள இனத்தின்'' இளைஞர்களை பச்சைப்படியாக கொல்வதிலிருந்து அம்பலமாகிறது. இனவாத யுத்தத்தை நடத்துவது ''நாட்டின் சுயாதீனத்தை'' காக்கவே என்ற பொய், ஏகாதிபத்தியத்திற்கு வர்த்தக வலயங்களை ஒதுக்குவதனால் மட்டுமல்ல காணி நிலங்களை விற்பனை செய்யும் உரிமையை வழங்குவதாலும்வெட்டவெளிச்சமாகியுள்ளது. 'சனநாயகம் காக்கவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம் என்னும் பேரிகையானது தமிழ் ஒடுக்கப்படுவோரை கொலை செய்வதால் மட்டுமன்றி தென்புறத்தில் நடத்தும் பரந்தளவிலான பயங்கர நடவடிக்கைகளாலும் அம்பலமாயுள்ளது.

பிரேமதாச . அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் இந்த நாசகார வேலைத்திட்டத்தினைத் தீட்டியமைக்கு காரணம் அவர்களின் பலம் அல்ல. யூ. என். பி. அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவ கட்சிகளுக்கு துணை நின்று அவற்றின் பின்னால் மண்டியிட்டு சென்று தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் கண்களில் மண்தூவிவிடும் சமசமாஜ,ஸ்டாலினிச, (இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி) நவசமசமாஜ, இ, தொ. கா. தலைமைகளின் துரோக முண்டுகொடுப்பே, இதற்கான காரணமாகும்.

இத்துரோகிகள், கிராமப்புற படுகொலை பயங்கரச் செயல்களுக்கும் இனவாத யுத்தத்திற்கும் ஆதரவளித்து, பிரேமதாச அரசாங்கத்தின் கரங்களை பலப்படுத்தினர், அவர்கள் உலகவங்கி, முதலாளித்துவ அதிகாரங்களுக்கெதிராக தொழிலாளர் உரிமைகளுக்காக முதலாளித்துவ கட்சிகளிலிருந்தும் விடுபட்டு அரசியல்ரீதியில் உக்கிரமாக வர்க்க போராட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு முழு எதிரிகளாக விளங்குகின்றனர் பிரேமதாச அரசாங்கத்திற்கு எதிராக செல்லும் தொழிலாள-ஒடுக்கப்பட்ட மக்களை முதலாளித்துவ சி. ல. சு. கட்சி, மக்கள் முன்னணிக்குள் சிறைப்படுத்திவிடவே இத்தலைவர்கள் பாடுபடுகின்றன.

விடுதலைப் புலிகளை அழிக்கும் யுத்தத்தில் இணைந்துள்ளோம் என பாராளுமன்றத்தில் தெரிவித்து 500 கோடி ரூபாய்களை ஒதுக்க யூ. என், பி. அரசாங்கம் கொண்டுவந்த யுத்த பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்த வாசுதேவ நாணயக்கார உட்பட்ட நவசமசமாஜ சந்தர்ப்பவாத தலைமைகள் கும்பல்,இன்றுமுதலாளித்துவ சி. ல சு, கட்சியுடன் முன்னணியமைக்சு ஓடித்திரிகிறது. அத்தோடு நாசமாக்கப்படவேண்டிய அமைப்பென தாம் கூறிக் கொண்ட விடுதலைப் புலிகள் தலைமையையும் அரசாங்கத்தை ''தூக்கிவீசும் முன்னணியில்'' இடம் பெறுமாறு மேதின செய்தியில் அழைப்பு விடுத்துள்ளது. இந்தப் படு பிற்போக்கு அரசியல் குத்துக்கரணம் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை குழப்பியடிப்பதோடு அவர்களை முதலாளித்துவ தலைமைகளின் பிடிக்குள் மாட்டி வைப்பதாகும்.

''தேசிய சோசலிசம்'' ஒன்றை கட்டியெழுப்பும் பொருட்டு முதலாளித்துவ அரச எல்லைகளை அங்கீகரித்து முன்வைத்த வேலைத்திட்டங்கள் பொறிந்து விழும் நிலைமைகளின் மத்தியில், ஏகாதிபத்தியத்தின் புதிய நலன்களுக்கு ஏற்ப வலதுசாரித் திசையில் செல்வதாய் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைமைகளின் துரோகம் விளங்குகிறது. ஏகாதிபத்தியமும் அரைக்காலனித்துவ தேசிய முதலாளிகளும் சீர்திருத்தவாதம் ஸ்டாலினிசம் மற்றும் இடதுசாரி ஏஜந்துகளது ''தேசிய சோசலிசத்'' திட்டங்களை ஏற்றுக்கொள்ள இனியும் தயாரில்லை. முதலாளித்துவம் அத்தியாவசியமானது. இன்றியமையாதது என பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்குச் சென்றுள்ள இத்தலைமைகள் தற்சமயம் முதலாளித்துவத்தை காப்பாற்றும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தை அடக்கிவைக்கும் அரசியல் பொலிஸ்காரராக செயற்படுகின்றனர்.

ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் தமது ஆட்சிப் பிராந்தியங்களை வகுத்துக்கொள்ளும் அளவுக்கு கீழிறங்கிச் சென்றுள்ள விடுதலைப் புலிகள் தலைமையினால் தமிழ்ஒடுக்கப்படும் மக்களின் போராட்டமானது ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது.

சமசமாஜ—கம்யூனிச — நவ சமசமாஜக் கட்சிகளினதும் இ, தொ. கா, துரோக தலைமைகளினதும் காட்டிக்கொடுப்பினையும் விடுதலைப் புலிகள் தலைமைகளது பிற்போக்கு வேலைத்திட்டங்களையும் நிராகரித்து இலங்கை – தமிழ் ஈழம் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து ஒடுக்கப்படுவோரை தம்மைச்சூழ அணிதிரட்டி, யூ. என். பி. அரசாங்கத்தை தகர்ப்பதன்மூலம் இலங்கை - ஈழம் சோசலிச குடியரசினைக் கட்டியெழுப்பப் போராடுவதே எஞ்சியுள்ள ஒரே ஒரு வழியாகும். உலக சோசலிச புரட்சியின் பாகமாக விளங்கும் இவ்வேலைத் திட்டத்தை நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே முன்வைக்கிறது.

இவ்வேலைத்திட்டத்தினால் மட்டுமே தமிழர் விரோதஇனவாத யுத்தத்தினால் ஏற்படுத்தப்படும் இடைவிடா அழிவை நிறுத்தி, சிங்களம்—தமிழ் பேசும்தொழிலாளர்,ஒடுக்கப்பட்டவர்களை சுயவிருப்புடன் சனநாயகவாதிகளாக ஒருங்கிணைப்பது சாத்தியமாகும். ஏகாதிபத்திய பிடியை உடைத்தல் முக்கிய முதலாளித்துவ கைத்தொழில், வர்த்தகத்தை தேசியமயமாக்கல்,விவசாயிகள் பிரச்சினைக்கான தீர்வு என்பவை இங்ஙனம் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்புவதால் மட்டுமே சாத்தியமாகும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் வடக்கு — கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படுவோரையும் கிராமப்புற விவசாயிகளையும் பாதுகாக்க உடன் மூன்வரவேண்டும். பிரேமதாச அரசாங்கமானது வடக்கு — கிழக்கிலும் கிராமபுறத்திலும் இரத்தகளரியை தொழிலாள வர்க்கத்தின் ஒடுக்கப்பட்ட நண்பர்களுக்கு எதிராகவே திணித்துள்ளது. ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ வர்க்கத்தின் நசுக்கலுக்கும் அழிவுக்கும் எதிராக கிளர்ச்சி செய்யும் இம்மக்களை ஒடுக்கித்தள்ளும் பிரேமதாச அரசாங்கம், தொழிலாள வர்க்கத்தை அந்நியபடுத்தி நசுக்கி ஒழிக்கும் எதிர்ப்புரட்சிகர மூலோபாயத்துடன் செயற்படுகின்றது. தொழிலாளலர்க்கத்திற்கு இந்த எதிர்ப்புரட்சிகர வேலைத்திட்டத்தை தோற்கடிக்கவும் சோசலிச புரட்சியை முன் எடுத்து செல்லவும் வடக்கு —கிழக்கு தமிழ் ஒடுக்கப்படுவோரின் தேசியசனநாயகஉரிமைகளையும் கிராமப்புற ஏழைகளின் விவசாய பிரச்சியையும் தீர்க்கப் போராடி, அவர்களை தம்பால் வென்றெடுப்பதும் அத்தியாவசியமாகும்.

முதலாளித்துவ அமைப்பினுள் வேலையின்மை, தரித்திரம் என்பவற்றால் நசுங்குண்டு, கொலைக்கு இலக்காகும் இளைஞர்களை, பிரேமதாச அரசாங்கத்தினதும் முதலாளித்துவ வர்க்க ஒடுக்கப்படும் அரச இயந்திரத்தின் முக்கிய அம்சமானஇராணுவ, பொலிஸ் படைகளில் சேராதே! என்று புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகம் கோரிநிற்கிறது. முதலாளிகள், துரித்திரத்திற்கு ஆட்பட்டு விரக்தியடைந்த நிலையிலுள்ள இளைஞர்களைபரந்தகொலைகார இயக்கத்திற்கும் ஈர்ப்படுத்துகின்றனர். அல்லது இராணுவத்தில் சேர்த்து தமக்கு எந்தவித குற்றமுமிழைக்காத ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை போன்று தென்புற தொழிலாள ஒடுக்கப்படும் மக்களையும் கொலை செய்யும்படி அனுப்புகின்றனர். கடந்த ஆண்டில் அதிகம் வேலைவாய்ப்பளித்ததாக பிரச்சாரம் செய்யும் பிரேமதாச அரசாங்கம் அரச இராணுவ படைகளுக்கு இளைஞர்களை ஆயிரக்கணக்கில் சேர்த்து ஆறுவார பயிற்சியின் பின்னர் இனவாத யுத்தத்தின் துப்பாக்கி வேட்டுக்களாக முன்னணியில் தள்ளியுள்ளது.

இந்த கொலைகார இயந்திரத்தில் எந்தவொரு இளைஞருமே சேரக்கூடாது. தொழிலாள வர்க்கம் இந்த இளைஞரை பாதுகாகக வேண்டும். இவ்விளைஞர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ''இளம் சோசலிஸ்டுகள்'' இயக்கத்தில் சேர்ந்து. தொழிலாளவர்க்கத்துடன் இணைந்து சோசலிசப் புரட்சிக்காகப் போராட முன்வர வேண்டும். துரோகத் தலைமைகளை தொழிலாள வர்க்கத்திலிருந்தும்விரட்டியடித்து புரட்சிகர தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப தமது புரட்சிகர ஜீவஅணுவை பு, க. கழகத்திற்கும் இளம் சோசலிஸ்டுகள் இயக்சுத்திற்கும் வழங்குமாறு ஒடுக்கப்படும் இளைஞர்களை நாம் வேண்டுகின்றோம்.

★ வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்து! வடக்கு — கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்று! தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டு!

★ கிராமப்புற படுகொலையை நிறுத்து! சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

★ உலகவங்கி—யூ என், பி. முதலாளித்துவ எஜமானர்களது தாக்குதல்களை தோற்கடித்து தொழில். சம்பளம், சேவை நிலைமைகளை பேணு!

என்ற கோரிக்கைகளின் பேரில் பொதுவேலை நிறுத்தத்தை தயார்செய்ய சகல தொழிலாளர் அமைப்புகளதும் பிரதிநிதிகள் மகாநாடை கூட்டும் பொருட்டு பு.க. கழகம் செய்யும் பிரச்சாரத்தினை தொழிலாள ஒடுக்கப்படும் மக்களினுள் முன் எடுத்து செல்ல வேண்டியது இந்நிலையில் மிக அவசியமானது.

சமசமாஜ—கம்யூனிச —நவ சமசமாஜ இ. தொ. கா. தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடனானதொடர்பை அறுத்து இவ்வேலைத்திட்டத்திற்காக போராட வேண்டும்! என்று நிர்ப்பந்திப்பதுடன் துரோகதலைமைகளின் காட்டிக் கொடுப்பை தவிர்த்து, அவர்களது அடிபணிவை புரட்டியடித்து போராட்டத்தில் அணிதிரள தத்தம் அமைப்புகளுள கிளர்ச்சிகரமாக முன் வருமாறு தொழிலாளர்களையும் இளைஞர்களையும் பு.க. கழகம் வேண்டுகின்றது.

★ பு. க. கழகத்திலும் அதன் இளைஞர் அமைப்பிலும் இணைக!

★ ''கம்கறு மாவத்த'' ''தொழிலாளர் பாதை'' பத்திரிகை வாசியுங்கள்!

## தோட்டங்களில் சேவைக்காலம் வெட்டு

தோட்டங்களில் தொழிலாளர் இதுவரை 60 வயது வரை தொழில் புரிய இருந்து வந்த உரிமையை 55 வயதாகக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தோட்டங்களில் வேலைநாட்கள் வெட்டுக்கு மேலதிகமாக அமுல் செய்யபபடும் இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சோசலிச புரடசியின் உலகக் கட்சியை கட்டி எழுப்பு.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி :

தேசிய செயலாளர்.

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைநெசவு தொழிலாளர்கள் மிலேச்ச சுரண்டலுக்குப் பலி!

ஆடை தயாரிப்புக் கைத்தொழிலைச் சேர்ந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களை மிலேச்ச சுரண்டலுக்கு உள்ளாக்கும் பொருட்டு முதலாளிகள் காட்டுமிராண்டி தாக்குதல்களில் இறங்கியுள்ளார்கள். இரத்மலானை கடிலக், ஹைடெக்ஸ், யூனிவேக்கல் டிசைன் டிசைன் (ஜில்) யூனிவேர்சல் பஷன் (இன்டர்நஷனல்) மக்ஷீம்முதலானவற்றை சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் முதலாளிகளின் இந்த கொடூர ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

ஒரு சில வாரங்கள் கதவடைப்புக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு விட்டு மார்ச் 11ம் திகதி சேவைக்குச் சென்ற கடிலக் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழியும் நடவடிக்கைகளில் அதன் முதலாளி ஈடுபட்டுள்ளார்.

ஏப்ரல் 05ம் திகதி அந்த பக்டரியில் வேலை செய்யும் மொஹமட் என்ற காடையனைக் கொண்டு நிர்வாகி நடாத்திய கால் உதையால் பெண் தொழிலாளி ஒருவர் மூர்ச்சையுற்று விழ்ந்தாள், தாக்குதலுக்குள்ளான இப்பெண் தொழிலாளி பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிள்ளாள்.

சேவை முடிந்து வெளியேறி கொண்டிருந்த பெண் தொழிலாளிகளின் ஆத்திரத்தில் இருந்து இக்காடையனைக் காப்பாற்றும் பொருட்டு பொலிசார் ஜீப் வண்டியில் வந்ததோடு, அங்குலான புகையிரத நிலையத்தில் புகை வண்டிக்காக காத்து நின்ற இப்பெண் தொழிலாளிகளைப் பயமுறுத்தும் பொருட்டு ஆகாயத்தில் வெடி தீர்த்தனர். அத்தோடு பெல்ற்களால் அவர்களைத் தாக்கினர். தப்பியோடிய பல தொழிலாளிகளின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஆலை நிர்வாகி தொழிலாளர்களை கட்டம் கட்டமாக வேலை நீக்கம் செய்யும் கடிதங்களை வழங்கியுள்ளான்; ஒவ்வொரு கட்டத்திலும் சுமார் 100 தொழிலாளிகள் வேலையில் இருந்து இடை நிறுத்தம்செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சேவை இடை நிறுத்த காலத்துக்கு சம்பளம் வழங்கப் படமாட்டாது எனவும் அந்த இடைநிறுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க எதிர்ப்பு

ஏப்ரல் 11ம் திகதி சேவையில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளிகள் மத்தியில் பேசிய முதலாளி, பக்டரிக்குத் தொழிற்சங்கம் அவசியமில்லை எனவும், கிளைச் சங்கத் தலைவியை திரும்பவும் வேலைக்கு ரேர்க்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளான். அத்தோடு கிளைச் சங்கத் தலைவிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதலாளி மிரட்டியுள்ளான். தண்டனையின் பேரில் ஒரு மாதம் இடமாற்றம் பெற்றிருந்த 10 தொழிற்சங்கத் தலைவர்கள் ஏப்ரல் 10ம் திகதி பக்டரிக்கு அழைக்கப்பட்ட போதும், முதலாளி அவர்களை பக்டரிக்குள் அனுமதிக்க மறுத்துள்ளான்.



தொழில் உரிமைக்காக போராடி வரும் ஹைடெக்ஸ்

## ஹைடெக்ஸ்

ஹைடெக்ஸ் பக்டரி தொழிலாளர்கள் முதலாளியின் கதவடைப்புகளுக்கு எதிராக வர்த்தக கைத்தொழில் ஊழியர் சங்க கிளையை காக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர், பக்டரிக்கு வெளியில் உள்ள தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தை கைவிட்டு விட்டுச் சேவைக்கு வந்தால் மட்டுமே அவர்களுக்கு வேலை வழங்க முடியும் எனவும் இல்லையேல் பக்டரி தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் எனவும் பக்டரி முதலாளி மிரட்டியுள்ளான்.

இரத்மலானையில் உள்ள மற்றிரு ஆடைநெசவு தொழிற்சாலைகளான யூனிவேர்ஷல் பஷனும் யூனிவேர்ஷல் டிசைனும் ஏப்ரல் 1ம் திகதியில் இருந்து கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனால் 1500 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். பக்டரியை தொடர்ந்தும் நடாத்த முடியாததால் அது முடப்படுவதாகக் கூறும் அறிவித்தல் முதலாளியால் பக்டரி கதவில் ஒட்டப்பட்டுள்ளது. ஆடைநெசவு கைத்தொழில் அதிபர்கள் சங்கத் தலைவருக்கு சொந்தமான மக்ஷிம் பக்டரியில் தொழிற்சங்க வேட்டைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது, ஆடைநெசவு. பொது தொழிலாளர் சங்கக் கிளைச் செயலாளரும், சங்க உறுப்பினரும்முதலாளியால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முதலாளிததுவ சஞ்சிகையான 'குளோத்திங்' கின் மார்ச் இதழில் வெளியாகியுள்ள தகவல்களின்படி கள்ள துணி கடத்தல் வர்த்தகத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்த 26 பக்டரிகளைச் சேர்ந்த 20,000 பெண் ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்தச் சுரண்டல்களுக்கு மேலதிகமாக கடிலக், ஹைடெக்ஸ், யூனிவேர்கல் டிசைன், யூனிவேர்கல் பஷன் மக்ஷிம் முதலான பக்டரிகளில் ஊழியர் சேமலாப நிதி, வேலை கொள்வோர் நம்பிக்கை நிதி ஆகியன முதலாளிகளால் சுருட்டிக் கொள்ளப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடிலக் போன்ற பக்டரி முதலாளிகள் தொழிலாளர்களுக்கு மிகவும் அடிப்படையான வசதிகள்—மலசல கூட வசதிகள் கூட இல்லாமல் பொலிசாரின் உதவியோடு அற்ப சம்பளத்துக்கு அவர்களின் ஊழியத்தைச் சுரண்டி கொண்டுள்ளார்கள்.

இத்தொழிலாளர்கள் மேல் திணிக்கப்பட்டு வரும் இந் நெருக்கடியானது உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பாகமாகவே இங்கும் வெடித்துள்ளது. இலங்கை முதலாளிகளின் நாற்றமெடுப்பினை இது நன்கு சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் ஈட்டிக் கொடுப்பதில் சமீபகாலமாக முன்னணியில் நின்று வந்த இந்த ஆடைநெசவு கைத்தொழில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ள தொழில் வாழ்க்கை நிலைமைகளின் இலட்சணம் இதுதான். ஆடைநெசவு முதலாளிகளின் இச்சகல சுரண்டல்களுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் பிரேமதாச அரசாங்கம் பக்கபலமாய் உள்ளது.

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்ய சட்ட ரீதியாக உரிமை இருந்த போதிலும் வேலைத் தலங்களில் அவற்றை அமுல் செய்ய சட்டத்தில் இடம் இல்லை என யூ. என். பி. அரசாங்கத்தின் தொழில்ஆணையாளர்கடந்த மார்ச் மாதத்தில் தொழிற்சங்க தலைவர்களுக்கு குறிப்பிட்டுள்ளார். அத்தோடு வெளிநாட்டு மூலதனத்தை இலங்கைக்குள் குவிக்கும் பொருட்டு அரசாங்கம் பிரமாண்டமான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. நாளுக்கு ரூபா. 40/-சம்பளத்துக்கு (1 டாலர்) உழைப்பை சுரண்ட வருமாறு அரசாங்கம் பன்னாட்டு கம்பனிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆடைநெசவு தொழிலாளர்களினைக் காக்கும் பொருட்டு கடிலக், ஹைடெக்ஸ் யூனிவேர்ஷல் பக்ஷிம், யூனிவேர்சல் டிசைன் தொழிலாளர்களின்தொழிற்சங்க, தொழிற் உரிமையை தாக்க அணிதிரளுமாறு தொழிலாளர் பாதை' சகல தொழிலாளர்களையும் வேண்டுகின்றது.

## சீநோர் பக்டரிகளின் மூடுவிழாவை தோற்கடிக்க வேண்டும்

சீ — நோர் காரைநகர், குருநகர் பக்டரிகளைச் சேர்ந்த சுமார் 250 தொழிலாளர்களுக்கு கடந்த 9 மாதங்களாகச் சம்பளம் வழங்க மறுத்து வரும் நிர்வாகம, இதுதொடர்பாக சீ-எம். யூ, கிளைச் சங்க தலைமைப் பீடத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பாகவும் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது.


1990 யூனில் இருந்து இனவாத யூ. என், பி. அரசாங்கத்தின் ஆயுதப்படைகள் வடக்கு — கிழக்கில் நடாத்தி வரும் இனப்படுகொலைகளைத் தொடர்ந்து காரைநகர்ப் பக்டரியில் உற்பத்தி தடைப்பட்டதோடு, இன்று அது ஆயுதப்படைகளின்மற்று மோர் முகாமாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இனவாதப் படைகள் தொடர்ந்து நடாத்திவரும் விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் அடிகளால் பக்டரிக்கு பெரும் சேதமேற்பட்டிருக்கலாம் என தொழிலாளர்கள் அஞ்சுகிறார்கள்,

நைலோன் மீன்பிடி வலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குருநகர் பக்டரி, ஆயுதப் படைகள் கோட்டையைடு கைப்பற்றும் இராணுவக்கெடுபிடிகளில் ஈடுபட்ட வேளையில் இடம்பெற்ற குண்டு வீச்சுக்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் தொழிலாளர்களின் விடா முயற்சி காரணமாக பக்டரி இயந்திர சாதனங்கள் சேதமடையா வண்ணம் காப்பாற்றப்பட்டுள்ளன.

'பைபர் கிளாஸ்' விசை படகு உற்பத்தியில் முன்னணியில் நின்ற இப்பக்டரி தொழிலாளர்களுக்கு சம்பளம வழங்க மறுப்பதன் பின்னணியில் பக்டரயை இழுத்துமூடும் சதி இருந்து வருவதாக தொழிலாளர்கள் அஞ்சுகிறார்கள். இப்பக்டரிகளின் சொத்து விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கொழும்பு கடற்தொழில் அமைச்சு வட்டாரங்கள், இவற்றுடன் தொடர்புடைய தஸ்தாவேசுக்களை தலைமைக்காரியாலயத்துக்கு மாற்றும் முஸ்தீபுகளிலும் இறங்கியுள்ளன,

1960பதுகளில் 'நோறாட்' உதவியைக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் தொழில் வாய்ப்புக்கென ஆரம்பிக்கபட்ட இந்த படகுகட்டும், வளை பின்னல் பக்டரிகளுக்கு குரல் வளையில் கயிறு இறுக்கும் வேலையை இனவாத யூ. என். பி. அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது,

சீ—நோர் தொழிலாளர்களின் தொழில் உரிமை காக்கும் போராட்டமானது பக்டரிகளின் முடுவிழாவுக்கு எதிரான ஈவிரக்கமற்ற போராட்டத்துடன்பிணைக்கப்பட்டுள்ளது. அது தொழிலாள வர்க்க தலைமையிலான புரட்சித் தலைமையையும் சோசலிச வேலைத்திட்டத்தையும் வேண்டிநிற்கிறது.




வெளிவந்துவிட்டது :

முதலாளித்துவத்தின்

மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின்

பணிகளும்.

## இடைமருவு வேலைத் திட்டம்

நான்காம் அகிலத்தின்

ஸ்தாபக மகாநாட்டில்

நிறைவேற்றப்பட்டது

**'தொழிலாளர் பாதை'**

வெளியீடு.

தொடர்பு: ஆனந்த வக்கும்புர,
90, 1வது மாளிகாகந்த லேன்,
கொழும்பு—10.

கொழும்பு—10, 1ஆவது மா[illegible] வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால்
மஹாகம நாகஹவத்தை வீ[illegible]அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org